பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 18 வியாழக்கிழமை (01.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 185

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

### சூசையுடன் நேற்று விரிவான பேச்சு

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன் இன்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர்மட்டக் குழுவினரை சந்தித்துப் பேசுகிறார்.

தற்போது நிலவும் நெருக்கடி நிலைமைகள் குறித்து இரு தரப்பினரும் விரிவாகக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தற்குப் பிறகு கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்திப்பது இதுவே முதல் முறை என்பதால் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக நோக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக கண்காணிப்புக் குழுத் தலைவர் வன்னியிலேயே தங்கியிருக்கிறார். தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உரப்பைக்குள் இளைஞரின் சடலம் மன்னார் கடற்கரையில்

மன்னார்,ஜூன்1

மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில் உரப்பைக்குள் சுற்றப்பட்ட நிலையில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

இதுதொடர்பாக ஊர் மக்கள் அப்பகுதி கிராமசேவையாளருக்குத் தகவல் கொடுத்தனர். இதனை அடுத்து சடலம் காணப்பட்ட இடத்திற்கு மன்னார் பொலீஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுங்கள்!

## அரசுக்கு ஐ.தே.கட்சி வற்புறுத்து

கொழும்பு, ஜூன் 01

**விடுதலைப்புலிகளுடன் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென நேற்று வற்புறுத்தித் தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி, இதற்காக விடுதலைப் புலிகளுடன் ஏற்கனவே செய்துகொண்டுள்ள இணக்கப்பாடுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.**

**இலங்கை அமைதி முயற்சிகள் குறித்தான இணைத்தலைமை நாடுகளின் அறிவிப்பை வரவேற்று ஐ.தே.க. நேற்று அறிக்கையொன்றை விடுத்தது. அதிலேயே அக் கட்சி இவ்வாறு தெரிவித்துள்ளது.**

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் - அனைத்து இனங்களினதும் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் - நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் - வகையிலான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அந்த அறிக்கை அமைந்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டறிக்கை தொடர்பிலேயே நேற்று ஐ.தே.க. இந்த அறிக்கையை விடுத்தது.

முன்னைய ஐ.தே.கட்சி அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்படுத்திக்கொண்ட அடிப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் சூட்டுக்கு படைச் சிப்பாய் பலி!

கரவெட்டி, ஜூன் 01

யாழ். பருத்தித்துறை வீதியில் நெல்லியடி சந்திக்குச் சமீபமாக - ரெலிகொம் பரிவர்த்தன்னை நிலையத்திற்குப் பாதுகாப்பு வழங்கும் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் மீது நேற்று நண்பகல் ஒரு மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்தார்.

லான்ஸ் கோப்ரல் சந்திர ரட்ண (வயது 41) என்ற சிப்பாயே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவர் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச்சென்றனர் என்றும் -

உடனடியாக அவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் அங்கு அவர் சத்திரசிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்தச் சூட்டுச் சம்பவத்தையடுத்து யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாலித ஹோகன்ன தலைமையில் ஒஸ்லோ பேச்சுக்கு அரச குழு!

கொழும்பு, ஜூன் 1

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 8ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்ற கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பு வழிமுறைகள், செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் பேச்சுக்களில் அரசுத் தரப்பில் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பாலித ஹோகன்ன தலைமையிலான குழு ஒன்று பங்குபற்றவிருக்கின்றது.

இந்தக் குழுவில் இடம் பெறுகின்ற ஏனைய உறுப்பினர்கள் யாவர் என்பது இன் னமும் தீர்மானிக்கப்படவில்லை என்று பாலித ஹோகன்ன நேற்றிரவு 'உதயன்'க்குத் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை விதித்தாலும் புலிகளுடன் தொடர்பை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் பேணும்

### வன்முறைகளுக்கு புலிகள் மட்டும் காரணமல்லர் என்றும் தெரிவிப்பு

வன்முறைகளுக்கு முடிவுகட்டி, சமாதான பேச்சுகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு ஏதுவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உறவுகள் தொடர்ந்தும் பேணப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உறுதிசெய்து நேற்று அதிகாரபூர்வமாக அறிக்கை யொன்றை வெளியிட்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கடந்த செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளின் தொடர்ச்சியாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நடைமுறைக்கு வந்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இருந்தபோதும், தொடரும் வன்முறைகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே காரணம் அல்ல என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிகழும் சகலவிதமான வன்முறைகளையும் கட்டுப்படுத்தி, குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடும் பண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவரு

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஒஸ்லோ பேச்சுக்களில்—

## அரச உயர்மட்டக் குழு பங்குபற்றினால் மட்டுமே புலிகளின் உயர்மட்டக்குழுவும் பங்கேற்குமாம்!

கிளிநொச்சி,ஜூன்1

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பாதுகாப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுக்களில் அரச உயர்மட்டக் குழு பங்குபற்றும் பட்சத்திலேயே விடுதலைப் புலிகளின் உயர்மட்டக்குழுவும் அதில் பங்குபற்றும் என அறியவருகிறது.

மேற்படி பேச்சுக்களில் பங்குபற்றுமாறு நோர்வே விடுத்த அழைப்பிற்கிணங்க அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித ஹோகன்ன தலைமையிலான குழு இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் என அரச தரப்பு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் முன்னரங்கில் படையினர் - புலிகள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணம் நாகர்கோவில் முன்னரங்க காவலரண் பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை சிறிய மோதல் ஒன்று இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

நாகர் கோவில் முன்னரங்க சூனியப் பிரதேசத்தை நோக்கி விடுதலைப்புலிகள் முன்னேறி வந்தனர் என்றும் - அப்போது படையினர் அவர்கள் மீது தாக்குதலை நடத்தினர் என்றும் இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும், படையினரே முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர் என்றும் தாங்கள் மேற்கொண்ட பதிலடித் தாக்குதலில் அவர்கள் பின்வாங்கி ஓடிவிட்டார்கள் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இரு தரப்பினரும் மாறிமாறி ஷெல் தாக்குதலை நடத்தினர் என்றும் தகவல்கள் தெரிவித்தன. எனினும், இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

# புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்கு நிதி மலேஷியா, சிங்கப்பூர் ஆகியன ஊடாகவே

## கோலாலம்பூரில் அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கோலாலம்பூர், ஜூன் 1

தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளிலேயே புலிகள் ஆயுதங்களைக்கொள்வனவு செய்கிறார்கள். இதற்காக மேலை நாடுகளில் சேர்க்கப்படும் நிதி சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகள் ஊடாகவே அந்த நாடுகளை சென்றடைகின்றது என்று அமைச்சர் மங்கள சமரவீர கோலாலம்பூரில் வெளியாகும் 'நியூஸ் ரோயிட் டைம்ஸ்' பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அதற்கான நிதியைத் திரட்டுவதற்கும் புலிகளுக்கு இடமளிக்க வேண்டாமென்றும், இது விடயத்தில் எங்களுக்கு உதவுமாறும் நாம் இந்த நாடுகளைக் கேட்டிருக்கின்றோம் என்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

''ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் திரட்டிவரும் நிதியை மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு அனுப்புவதற்கு கையாளப்படவேண்டிய நடைமுறைகள் மிகச் சிக்கலானவை - இதனாலேயே மலேஷியா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பை நாங்கள் நாடி நிற்கிறோம்'' - என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

தங்களது வேண்டுதலை தாய்லாந்து, கம்போடியா, மலேஷியா ஆகியன ஆகக்கூடுதல் கரிசனைக்கு எடுத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

116 உறுப்பினர்களைக் கொண்ட அணி சேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு மலேஷியாவில் நடைபெறுகிறது. அதில் பங்குபற்றுவதற்காகவே அமைச்சர் அங்கு வந்திருக்கிறார்.

நிதி திரட்டும் புலிகளின் வல்லமையை மட்டுப்படுத்துவதும் சமாதான முன்னெடுப்புகளுக்கு உதவும் ஒரு நடவடிக்கைதான் என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

### திருமலை நிலாவெளியில் கிளைமோர் தாக்குதல்

திருகோணமலை, நிலாவெளியில் சக்தி வாய்ந்த இரண்டு கிளைமோர் குண்டுகள் நேற்றுக்காலை வெடித்தன.

நிலாவெளி பீச் ஹோட்டலுக்கு அருகில் பொருத்திவைக்கப்பட்டிருந்த இந்த இரண்டு கிளைமோர்களும், கடற்படையினரின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து பொருத்தப்பட்டிருந்தன எனவும் -

ஆனால், கடற்படையினரின் வாகனத் தொடரணி நேரம் பிழைத்ததில் கிளைமோரில் இருந்து தப்பியதாகவும் படைத்துறை வட்டாரங்கள் கூறின.

இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. சம்பவத்தின் பின்னர் பொலீஸாரும், படையினரும் நிலாவெளிப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

# அரசைப் பாதுகாக்க வேண்டுமென்றால் ஹக்கீமை அதில் சேர்க்கவே கூடாது!

## அமைச்சர் பௌஸி கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 1

அரசைப் பாதுகாக்க வேண்டும் என்றால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசில் இணைக்கக்கூடாது. அவர் ஏற்கனவே முன்னைய அரசு கவிழ்வதற்கு காரணமாகவிருந்தவர். அவர் அரசில் இணைவதை நான் வன்மையாக எதிர்க் கிறேன்.

- இவ்வாறு அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி நேற்றுக் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர் இது தொடர்பாகக் கேட்டகேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது பற்றி அவர் கூறியதாவது:-

ஆட்சிக்கு வருகின்ற அரசின் பக்கம் தமது சுயநலத்திற்காக, பாய்வதே ரவூப் ஹக்கீமின் அரசியல் நடவடிக்கை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையிலான எமது அரசில் அப்போது இணைந்திருந்த ரவூப் ஹக்கீம் காரணம் ஏதுமின்றி ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் பாய்ந்தார். எமது அரசு கவிழக்காரணமாக இருந்தார்.

இம்முறையும் எமது அரசில் இணைய முயற்சிசெய்கிறார். அடிக்கடி ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிவருகிறார். அவர் இணைந்தால் அது எமது அரசிற்குப் பாதகமாகவே அமையும்.

அண்மைக்காலம் வரை அவர் அரசிற்கு எதிராகச் செயற்பட்டு வந்தார். பள்ளிவாசல்களில் ஒலிக்கின்ற ஐவேளைத் தொழுகைக்கான 'அதானை' ஜனாதிபதி தடைசெய்யப் போகிறார் என்றார். முஸ்லிம் பெண்கள் இனி வீதிகளில் தனிமையில் செல்லமுடியாது என்றார்.

இவ்வாறெல்லாம் அரசிற்கு எதிராகப் பிரசாரம் செய்தவர் இப்போது அரசுடன் இணைவதற்கு முயற்சி செய்துவருகிறார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவர் கிழக்கில் செல்வாக்கை இழந்துள்ளார். அவரது கட்சி 60 ஆயிரம் வாக்குகளைப் பெற்றதோடு எமது அரசு 40 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது அவர் தாம் அரசுடன் இணையப்போகிறார் எனப் பிரசாரம் செய்துவந்தார். இதனாலேயே மக்கள் அந்த 60 ஆயிரம் வாக்குகளை அவரது கட்சிக்கு அளித்தனர். அவர் அரசை விமர்சித்திருந்தால் படுதோல்வியடைந்திருப்பார்.

இப்போது எமது அரசில் இணையத் துடிக்கும் ரவூப் ஹக்கீம் பின்னர் அரசை வீழ்த்திவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் நிச்சயம் பாய்வார். இதைக் கருத்திற்கொண்டு ஜனாதிபதி இவரை அரசில் இணைக்கக்கூடாது. அவரது இணைவை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். - என்றார். (த - 07)

### அம்பாறை பக்கியெல்லவில் ஊர்காவலர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூன் 01

அம்பாறை, பக்கியெல்ல பிரதேசத்தில் உள்ள பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பக்கியெல்ல பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# இந்தத் தடை புலிகளை அடிபணிய வைக்காது அவர்களின் கடும் போக்குக்கே வழிவகுக்கும்

## இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு உறுதி

கொழும்பு, ஜூன், 1

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அவர்களை அடிபணிய வைப்பதற்குப் பதில், அதற்கு எதிரான அவர்களின் கடும் போக்கை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கே வழிவகுத்திருக்கிறது என்று இடதுசாரி முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்தின, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை, சமாதான முன்னெடுப்புகளுக்கு எதுவிதத்திலும் உதவமாட்டாது. இந்தத் தடை சர்வதேச சமூகத்திடமிருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தப் போகிறது என்று மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஒருபுறம் ஆர்ப்பரிக்கலாம்.

விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு வரவழைப்பதற்கு அரசின் இந்த முயற்சி தூண்டுகோலாக இருக்கிறது என்று மறுபுறம் கூறி மகிழலாம்.

ஐ.தே.கட்சியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடையை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறது.

ஆனால், உண்மையில் எதிர்விளைவுகளையே ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடை தரப் போகிறது. அதாவது, இந்தத் தடைகள் மூலம் தங்களை அடி பணிய வைக்க முடியாது என்ற தமது கடும் போக்கைப் புலிகள் இன்னும் மேலும் பலமாக சர்வதேச சமூகத்துக்கு வெளிக்காட்டு வதற்கான சந்தர்ப்பமாக அமையப் போகின்றது. இந்தத் தடை பேரினவாத சிங்களவரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று, சமாதானமாகவும், சுய உரிமையோடும் நாட்டில் வாழ்வதற்கு தமிழர்கள் நடத்தும் சுயாட்சிப் போராட்டங்களுக்கு மேற்கத்திய சுதந்திர ஜனநாயக நாடுகள் உதவும் என்று விடுதலைப் புலிகளுக்கு இருந்து வந்த நம்பிக்கையையும் துறப்பதற்கான சந்தர்ப்பமாகவுமே இது புலிகளுக்கு அமைந்திருக்கிறது.

எனவே, விடுதலைப் புலிகள், தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆதரவைத் தேடுவதற்கு பரந்து பட்ட உலகின் கண்ணே - விசேடமாக இந்திய உபகண்டத்திலுள்ள இடதுசாரி சக்திகளைப் பார்க்க வேண்டிய, நாட வேண்டிய அருந் தருணமும் இதுவேயாகும். இங்கே முக்கியமாக முதலில் செய்ய வேண்டியது இலங்கை அரசின் இரட்டை வேடத்தை, அந்த கபடத்தனத்தை அம்பலப்படுத்த வேண்டும்.

தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றைக் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் பிரசாரம் செய்துகொண்டு, அதே நேரம் ஒற்றையாட்சி அமைப்பு முறையை அழுங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு இராணுவ நடவடிக்கைக்குத் தயாராவதுமே அரசின் அந்த இரட்டை வேடக் கபட நாடகமாகும். - என்று உள்ளது.

# ஐ.தே.க. மாகாண சபை உறுப்பினர் வைத்தியசாலையில் வைத்து கைது

மேல் மாகாண சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினரான துமிந்த சில்வா நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு நவலோக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகையில் அங்கு வைத்து கைதுசெய்யப்பட்ட அவரை கொழும்பு பிரதம நீதிவான் குலச சரோஜினி வீரவர்த்தன நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள 'கிளப்' ஒன்றில் அமெரிக்கத் தூதகரத்தின் இரண்டு அதிகாரிகளைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கறுவாத்தோட்டம் பொலீஸார் இவரைக் கைது செய்திருந்தனர்.

அவரை எதிர்வரும் ஐந்தாம் திகதி அடையாள அணிவகுப்பு ஒன்றுக்கு உட்படுத்துமாறும் நீதிவான் வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருக்கிறார்.

துமிந்த சில்வா தாம் கைது செய்யப்படாமல் இருப்பதைத் தடுப்பதற்கான உத்தரவை விடுக்கக் கோரி தாக்கல் செய்திருந்த முன்பிணை மனு நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

### மனித உரிமை அலுவலர்கள் காங்கேசன்துறைக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

வடமராட்சிப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்ட இளைஞர்கள் இருவரையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலர்கள், அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டனர்.

கடந்த 26ஆம் திகதி அதிகாலை குறித்த இளைஞர்கள் இருவரதும் வீட்டுக்குச் சென்ற படையினர் விசாரணை செய்வதாகக் கூறி இருவரையும் கைதுசெய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கரணவாய் மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஜெயக்குமார் பேரின்பராஜா, இமயாணன் மேற்கைச் சேர்ந்த தேவமனோகரன் ஜதீஸ்வரன் ஆகிய இருவருமே இவ்வாறு படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி றெமீடியஸ், புலன் விசாரணை அதிகாரி மொறின் நிஷாந்தன் ஆகியோர் நேற்று மேற்படி இருவரையும் சென்று பார்வையிட்டனர். (190)

---

### உரைப்பைக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வந்த மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக சடலத்தை மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

இதையடுத்து பிற்பகல் 3.30 மணியளவில் மன்னார் பொலீஸார் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் உரப்பையில் போட்டு பொதி செய்யப்பட்டு முள்ளுக் கம்பியினால் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டது.

சடலத்தின் தலைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கான பெரிய துவாரம் காணப்பட்டது. இதனால், சடலத்தின் வலது புறம் தலையிலும் முகத்திலும் ஒரு பகுதி சிதைந்துள்ளது. ஆடை எதுவும் அற்ற நிலையிலேயே சடலம் காணப்பட்டது.

# அரச கூட்டுத்தாபனங்களின் தலைமைகளில் மாற்றம் வரும்

## ஜனாதிபதி ராஜபக்ஷ தீர்மானம்

கொழும்பு,ஜூன்1

அரச கூட்டுத்தாபனங்கள் பலவற்றின் தலைவர்களை மாற்றி புதிய முகாமைத்துவங்களை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாற்றம் இன்னும் சில தினங்களில் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படுகிறது. நீண்டகாலமாக கூட்டுத்தாபனங்களின் தலைவர்களாகப் பணிபுரிந்தும் உரிய சேவைகளை ஆற்றத் தவறியவர்கள் மற்றும் ஊழல்கள் பலவற்றுடன் தொடர்புடையவர்களெனக் கருதப்படுவோரே பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் இந்த யோசனைக்கமைய ரெலிகொம், லேக்ஹவுஸ், அரச வங்கிகள் மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழுள்ள முக்கியமான கூட்டுத்தாபனங்கள் பலவற்றில் இவ்வாறான மாற்றங்கள் இடம்பெறவுள்ளன எனக் கூறப்படுகிறது.

தமது உத்தேச அமைச்சரவை மறுசீரமைப்புக்கு முன்னரே இந்த மாற்றங்களைச் செய்துவிட ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. (க)

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## நடுநிலை தவறி பக்கச்சார்பாக செயற்படும் சர்வதேச சமூகம்

ஈழத் தமிழர் தரப்புக்கு ஒரு குட்டுப் போடும் விதத்தில் ஐரோப்பிய ஒன்றியத் தடை வந்து விட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் போட்ட குட்டைத் தட்டிச் சமாளிக்கும் விதத்தில்உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமைகளின் கூட்டறிக்கையும் வெளி யாகி விட்டது.

இரண்டிலுமே ஒரு விடயம் அவதானிக்கத்தக்கது. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாளும்போது ஐரோப்பிய ஒன்றியமாகட்டும், இணைத் தலைமைகளாகட்டும் ஒரு பக்கச்சார்பாகவே - ஒரு தலைப்பட்சமாகவே - நடந்து கொள்கின்றன என்பதுதான் அது.

நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக் காட்டியமை போன்று களத்தில் - தமிழர் தாயகத்தில் - அதிகரித்துச் செல்லும் வன்முறைகள், உயிர்ப் படுகொலைகள் போன்றவற்றுக்கு சம்பந்தப்பட்ட இரு தரப்புகள் மீதுமே குற்றம் சுமத்தப்படுகின்றது. இணைத் தலைமைகள் முதல் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவரை பல்வேறு மட்டங்களிலும் இந்த யதார்த்தம் ஒப்புக் கொள்ளப்படுகின்றது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றிம் தமிழர் தரப்பை - புலிகள் தரப்பை - மட்டும் கண்டித்து, தண்டிக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்க முற்படுகின்றது. இணைத் தலைமைகளோ தமது தீர்மானத்தை வெளிப்படுத்தும்போது இலங்கை அரசைக் காப்பாற்றி - காபந்து பண்ணும் விதத்தில் - சமாளிக்கும் வகையில் - கூட்டறிக்கை வெளி யிடுகின்றன. அதுதான் தமிழர் தரப்பைப் பெரும் ஆச்சரியத்துக்குள்ளும், விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

இணைத் தலைமைகளில் அங்கம் வகிக்கும் அமெரிக்காவாகட்டும் அல்லது பிரிட்டன் உட்பட ஐரோப்பிய ஒன்றியமாகட்டும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத்தான் முத்திரை குத்தியுள்ளன. அந்தத் தரப்பினால் புரியப்படும் - அல்லது புரியப்படுவதாகக் கூறப்படும் - வன்முறைகள்ளையும், வன்செயல்க ளையும் மீண்டும் மீண்டும் பயங்கரவாதச் செயல்கள் என்று அவை ஒப்புவிப்பதில் - 'அர்ச்சனை' செய்வதில் - அர்த்தமில்லை.

ஆனால், சட்ட ரீதியான ஓர் அரசு - இறைமையுள்ள ஓர் அரசு என சர்வதேச சமூகத்தின் முன்னால் தன்னை உரிமை கொண்டாடும் இலங்கை - தனது குடிமக்கள் எனத் தான் கூறிக்கொள்ளும் மக்கள் மீதே வன்முறைகளைப் புரியும் போது அது, வழக்கமாக சர்வ தேச தரப்புகளால் பயங்கரவாத அமைப்பு எனப் பட்டம் சூட்டப்பட்ட புலிகளினால் புரியப்படுவதாகக் கூறப்படும் பயங்கரவாதத்தை விடவும் மோசமான பயங்கரவாதம் ஆகின்றது.

இலங்கை வன்முறைகளில் ஒரு தரப்பினால் புரியப்பட்டவற்றை அப்பட்டமாக, புலிகள் புரிந்த 'பயங்கரவாதச் செயல்கள்' என்று அடித்துக் கூறும் இணைத் தலைமைகள், மறு தரப்பு வன்முறைகளை 'பயங்கரவாதம்' என்று சித்திரிப்பதோடு, அந்தக் குற்றச்சாட்டிலிருந்து தென்னிலங்கை சிங்கள அரசைக் காப்பாற்றி, விடுவிக்க வலிந்து முயற்சிக்கின்றன. அதன் மூலம் தமது ஒரு தலைப் பட்ச நிலைப்பாட்டை அவை அம்பலப்படுத்தி நிற்கின்றன.

தமிழர் தாயகத்தில் அரச படைகளுக்கும், அரச தரப்புக்கும் எதிராகப் புரியப்படும் வன்முறைகள் பலவற்றுக்கு 'பொங்கியெழும் தமிழ்ப் படை' என்ற பெயரில் உரிமை கொண்டாடப்பட்டாலும் அந்த வன்முறைகளுக்கு நேரடியாகப் புலிகளே காரணம் என்ற அடிப்படையில் குற்றம் சுமத்தும் இணைத் தலைமைகள், அப்பாவித் தமிழ்ப் பொது மக்களுக்கும், புலிகளின் ஆதரவாளர்களுக்கும், புலிகளுக்கும் எதிராகப் புரியப்படும் வன்முறைகளுக்கு மட்டும் கருணா குழுவும், ஈ.பி.டி.பியின் வன்முறை மூலங்களும் காரணம் என்று குறிப்பிட்டு - வலிந்து - சிங்கள அரசைக் காப்பாற்றவும், தான் 'பயங்கரவாதம்' எனச் சித்திரிக்கும் செயல்களுக்கான குற்றப் பொறுப்பிலிருந்து தென்னிலங்கை அரசை விடுவிக்கவும் முயல்கின்றது.

கருணா குழு போன்ற ஒட்டுப்படைகள் இலங்கை அரச படைகளின் புலனாய்வுப் பிரிவினரின் வழி நடத்தலில்தான் - அரச ஆசீர்வா தத்துடன்தான் - இயங்குகின்றன என்பது பரம ரகசியம். அதேபோல ஈ.பி.டி.பி வன்முறை மூலங்களை இயக்கும் ஈ.பி.டி.பி. கட்சி தொடர்ந்து வரும் சிங்கள அரசுகளில் ஒட்டிக் கொண்டு அங்கம் வகித்து, உயர் பதவிச் சுகங்களையும் அனுபவித்து வருகின்றது. இணைத் தலைமைகள் 'தமிழ் மக்களை பயங்கரவாதம் மூலம் அச்சுறுத்தும் ஈ.பி.டி.பி. வன்முறை மூலங்கள்' என்று குறிப்பிடுகின்ற தரப்பு அரசின் பங்காளியே என்பது மறைக்கத்தக்கதல்ல.

இவ்வளவும் தெரிந்தும் - அறிந்தும் - கூட, இத்தரப்புகளின் பயங்கரவாதத்துக்கு நேரடியாக சிங்கள அரசைப் பொறுப்பாக்காமல் பாதுகாக்கும் தனது பகீரதப் பிரயத்தனம் மூலம் தன்னுடைய ஒரு தலைப்பட்ச - ஒரு பக்கச் சார்புடைய - போக்கை இணைத் தலைமைகளும் நிரூபித்து நிற்கின்றன.

ஒரு புறத்தில் இடம்பெறுகின்ற தாக்குதல்களுக்கு உரிமை கோரும் 'பொங்கி எழும் தமிழ் மக்கள் படை' என்பது விடுதலைப் புலிகள்தான் என்று திட்டவட்டமாகக் கருதும் இணைத் தலைமைகளுக்கு, இலங்கை அரச படைகளின் வழிநடத்தலில், அரசுத் தலைமையின் பங்களிப்பு மற்றும் ஆசீர்வாதத்தில் கருணா குழு, ஈ.பி.டி.பியின் வன்முறை மூலங்கள் என்பன புரியும் பயங்கரவாதத்துக்கு அரசே பொறுப்பு என்று கூறும் திராணி இல்லாமல் போனது வியப்புக்குரியது. இந்தத் திராணி இல்லாததால் இணைத் தலைமைகளின் நடுநிலைப் போக்கு கேள்விக்குரியதாகிவிட்டது.

# போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முயற்சி செய்க!

## இலங்கையில் பணிபுரியும் ஜப்பான் நிறுவனங்கள் இரு தரப்பினரிடமும் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன்1

பிணக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்து பேச்சு மூலமான தீர்வுக்கான முயற்சிகளை உடன் மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு இலங்கையில் புனர்நிர்மாண அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஜப்பான் நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் இலங்கை சார்ந்த கற்கைகள் மன்றமும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

1983ஆம் ஆண்டுமுதல் இலங்கையிலே சிறுபான்மை மக்களான தமிழர்களுக்கென தனியர்னதொரு தாய்நாடு வேண்டுமென்று இலங்கை அரசுடன் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று நடைமுறைக்கு வருவதற்கு முன்புவரை 65ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டும் எட்டு லட்சம் மக்கள் அகதிகளாக இடம்பெயர நேர்ந்தும் பெரும் துன்பங்கள் ஏற்பட்டுள்ளன.

2004ஆம் ஆண்டின் இறுதியிலே இந்து சமுத்திரத்திலே ஏற்பட்ட புவிய திர்வினால் இலங்கையின் கடற்கரைப் பகுதிகளிலே ஏற்பட்ட சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் பெருந்தொகை மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், 30 ஆயிரம் மக்கள் திடீரென்று சிலநொடிப் பொழுதிற்குள் இறந்து போனார்கள்.

இலங்கை மக்களின் மீது மிகுந்த நட்பும் அபிமானமும் கொண்டிருந்த ஜப்பானிய மக்கள் அதனால் ஆழ்ந்த கவலையும், சோகமும் அடைந்தனர்.

2005ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இருந்து ஆயுதம் ஏந்திய மோதல்களும் கொடிய வன்செயல்களும் அதிகரித்து வருவதைக் காண்கின்றோம். அந்த நிலைமைகள் காரணமாக மிகுந்த கவலையும் கரிசனையும் கொண்டுள்ள நாங்கள், அவை முடிவுறுத்தப்படவேண்டும் என்று மிகவாக வலியுறுத்தி வேண்டுகின்றோம். அதனால், சர்வதேச சமுதாயத்தின் நன்முயற்சிகளால், இலங்கைத் தீவிலே ஏற்பட்டுவந்த நல்ல முன்னேற்றங்களும் அபிவிருத்திகளும் பெரியளவில்பாதிப்படைந்து பின்னிறக்கம் ஏற்படும்என்பதையிட்டு நாங்கள்பெரிதும்கவலையும் மனத்துயரும் அடைகின்றோம்.

இலங்கையிலே செயற்படும் பல ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டுமுயற்சியால் பல புனர்நிர்மாண அபிவிருத்திக் கட்டுமானச்செயற்பாடுகள் மூலமும் 'இலங்கை சார்ந்த கற்கைகள் மன்றம்' (**Sri Lanka Study Forum**) மூலமும் ஆய்வாளர்களும் அக்கறையுள்ளவர்களுமான நாம், மிக ஆர்வத்துடன் செயற்பட்டுக்கொண்டிருப்பதுடன், எல்லாவிதமான வன்செயல்களையும் கண்டனம் செய்வதுடன், எல்லாவிதமான அறிவுணர்வுகளும் சங்கமித்து சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்று நன்மனத்தோடு பிரார்த்திக்கின்றோம்.

✱ பிணக்கிற்குட்பட்ட இரு சாரார்களும் தொடர்ந்தும் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மதிப்பளித்து, பேச்சு மூலமான தீர்வுகான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

✱ சர்வதேச சமுதாயத்தை இலங்கையிலே சமாதானமும் புனர்வாழ்வும் ஏற்படுத்தும் விடயத்திலே நீண்டகால நோக்குடன் செயற்படவேண்டுகின்றோம். இலங்கைக்கு மிகவும் கூடுதலான உதவிவழங்கும் நாடான ஜப்பான் அரசு தொடர்ந்தும் உதவிகள் வழங்கி பிணக்குகளாலும் சுனாமியாலும் பெரும் பாதிப்பிற்குட்பட்டு அல்லலுறும் மக்களுக்கு மனிதநேயப் பாதுகாப்புடனான உதவிகள் வழங்க வேண்டுகின்றோம்.

உண்மையான சமாதானத்தை எட்ட அடிமட்டங்களில் இருந்து வழங்கப்படும் மனிதநேய உதவிகள் மிகமுக்கியமானவை என்று நாங்கள் கருதுகிறோம். அதனால், ஜப்பானிய மக்களும் அவர்களின் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறுபட்ட சவால்களையும் எதிர்கொண்டு தொடர்ந்தும் இலங்கையிலே சமாதானம் ஏற்பட செயலாற்றுவோம் என்றும் உறுதிபூணுகின்றோம் - என்றுள்ளது.

## பேராசிரியர் சூரியகுமாரன் 84 வயதில் காலமானார்



சுற்றாடல்துறை மற்றும் பொருளியல் துறையில் தன்னிகரற்ற சிறப்புப் பெற்றவராக விளங்கியுள்ள பேராசிரியர் சூரியகுமாரன் சில தினங்களுக்குமுன் தமது 84 வயதில் கொழும்பில் காலமானார். உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் சுற்றாடல்துறையிலும் பொருளியல்துறையிலும் அவர் பெரும் பணியாற்றி அண்மையில் இளைப்பாறினார்.

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சூரியகுமாரன் ஐ.நா.சபையின் ஆஸியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார ஆணையத்தின் பிரதித் தலைவராக பணியாற்றியவர். உலகின் பொருளாதார நிபுணர்கள் பலரை உருவாக்கிய லண்டன் பொருளியல் கல்லூரியில் பல ஆண்டு காலம் பேராசிரியராகவும் ஓய்வுபெற்ற பின் வருகைதரும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். (ப)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை பேச்சின் சமநிலையைப் பாதிக்கும்

## புலிகளின் சமாதானச் செயலர் கருத்து

கொழும்பு,ஜூன்1

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருக்கும் தடையானது, அமைதிப் பேச்சுகளின் அடிப்படைத் தேவையான இருதரப்பு சமநிலையைப் பாதிக்குமென்று விசனம் தெரிவித்திருக்கும் விடுதலைப் புலிகள், அந்த அடிப்படைகள் மேற்படி தடையினால் ஆட்டங்காணக் கூடு மென்று எச்சரித்திருக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து கடந்த திங்கட் கிழமை 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்திருக்கும் புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் எஸ். புலித்தேவன், ஸ்தம்பித்துப் போயுள்ள இலங்கையின் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு, ஐரோப் பிய ஒன்றியத்தின் இந்தத் தடை எந்த விதத்திலும் உதவப் போவதில்லை என்று கூறியிருக்கின்றார்.

இலங்கை இராணுவம் மற்றும் துணைப்படைகளின் அட்டூழியங்களை நிறுத்துமாறு கோருவதற்கும் இது விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தமொன்றை வழங்குவதற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தருணம் ஏற்பட்டுள்ளது எனக் கூறிய புலித்தேவன், ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயத்தில் பக்கச்சார்பின்றியும், நேர்மையான முறையிலும் நடக்கிறதா என்பதைக் கவனிப்போம் எனவும் கூறியிருக்கிறார்.

## பொதுநூலகத்தில் 'இன்ரநெற்' சேவை மீண்டும் இயங்க ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ். பொதுநூலகத்தில் கடந்த ஒரு வார காலமாகத் தடைப்பட்டிருந்த 'இன்ரநெற்' இணைப்புகள் நேற்று புதன் கிழமை தொடக்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன.

தற்போது நூலகத்தின் 'இன்ரநெற்' இணைப்புகள் துரிதகதியில் செயற்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் வாசகர்கள் பெரிதும் பயனடைய முடியும் என நூலகர் க.தனபாலசிங்கம் தெரிவித்தார். (202)

## காசநோய்த் தாக்கம் குறித்து தமிழில் விளக்க நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்1

பண்ணை மார்புநோய் சிகிச்சை நிலைய மாவட்ட காச நோய்க் கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரி டாக்டர் ஜமுனானந்தாவின் 'நடைமுறை காச நோய் கட்டுப்பாடு' என்னும் தமிழ் விளக்க நூல் வெளியீட்டு விழா கடந்த திங்கட் கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விந்தினர்களாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரமுகர்களின் உரைகளைத் தொடர்ந்து நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதற்பிரதியை யாழ். மாநகர சபை ஆணையாளர் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் வைத்திய கலாநிதிகள், பிர முகர்கள், மருத்துவத் துறையை சேர்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (204)

## கொலையாளிகள் குறித்துத் தகவல் தருமாறு மக்களிடம் படைத்தரப்பு கோருகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொலைச் சம்பங்களுடன் தொடர்புடையவர்களை கைதுக் செய்வதற்குத் தேவையான தகவல்களைப் பொதுமக்கள் பாதுகாப்புப் படையினருக்கு வழங்க வேண்டும் என பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கோரியுள்ளது.

இது தொடர்பாக செய்திக் குறிப்பொன்றை யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ளது.

மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள பல இடங்களில் எத்தனையோ பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இக் கொலையாளிகளைக் கைது செய்வதால் மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமை கிடைத்துள்ளது. ஆகவே, இந்தச் சமாதானத்தில் எதிரிகளைக் கைது செய்வதற்குத் தேவையான தகவல்களைப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கி நாளைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்- என்றுள்ளது.

### நாளை

வைகாசி - 19
வெள்ளிக்கிழமை
02.06.2006
திதி : சஷ்டி
பிற்பகல் : 02.15
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் : 02.52
சுபநேரம் : 05.52-07.22
ராகுகாலம் : 10.22-11.52

### உதயவாக்கு

மற்றவர்களிடமுள்ள நற்பண்புகளைக் கண்டு ஒரு கிண்ணம் அளவாவது வாழ்த்துச்சொல். உனக்கு நதியளவில் வாழத்துகள் கிடைக்கும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HA - XXXX தொடரிலக்கமுடைய மாருதி கார் 800, Pentium IV 3.OG HZ Computer, DVD Sony 5.1 set, L.G குளிர்சாதனப்பெட்டி ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776183302. (50725)

## காணி விற்பனைக்கு

பிறவுண் வீதி, கொக்குவிலில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.சிறீ. 0777 111400 (50719)

## வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையில் நான்கு படுக்கை அறைகளுடனும் இரண்டு குளியலறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: திருமதி சிவஞானம், இல.06, பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். T.P.: 8024, 0776540092, 0779921889 (குடும்பம் or தனியார் நிறுவனம் விரும்பத்தக்கது. (50692)

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் 5 வீடுகளைக் கொண்ட தொடர் மாடிக்கட்டடம் வாடகைக்குண்டு. (தனியார் நிறுவனங்களிற்கு உகந்தது) தொடர்பு: இல.06, பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை, நீராவியடி,யாழ்ப்பாணம். T.P.: 8024, 0776540092, 0779921889 (50691)

## வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதிகளில் ஒரு சிறிய கௌரவமான குடும்பத்திற்கு நல்ல சுற்றாடலில் ஓரளவான வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: மே/பா உதயன், விளம்பர இல.2877. (50696)

## ஆனைக்கோட்டையில் முதலுதவி வகுப்பு

நல்லூர், ஜூன்1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் பாடசாலையில் 3 நாள் முதலுதவிப் பயிற்சி வகுப்பை நடத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (111)

## வீடற்றவன் நாவல்

O/L பரீட்சைக்கு வேண்டிய நூல், வீடற்றவன் நாவலின் கதைச்சுருக்கம், விளக்கம், விமர்சனம் எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. இரண்டாம் பதிப்பு. ரூபா.75. (50685)

## தவறிவிட்டது

முழங்காவிலைச் சேர்ந்த பிறேமன் அருள்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (840183505V) பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நீ.வின்சன், புனித மரியாள் வீதி, நாவாந்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (50700)

பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி என்ற முகவரியை உடைய கதிர்காமு வசந்தன் என்பவருடைய தே.அ.அட்டை (இல.701262417V) நல்லூருக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். 235/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P.: 077 9672788 (50710)

## மீட்டல் வகுப்புக்கள்

குருநகரில் க.பொ.த சாதாரண தர வகுப்பில் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கான முதலாம் தவணைக்குரிய மீட்டல் வகுப்புகளை குருநகர் கார்மேல் இளைஞர் அமைப்பினர் நடத்திவருகின்றனர்.

இவ் வகுப்புக்கள் குருநகர் கார்மேல் மண்டபத்தில் இலவசமாக நடைபெற்று வருகின்றன. இம்மீட்டல் வகுப்புக்களில் குருநகரைச் சேர்ந்த சுமார் 75 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர். குருநகர் பிரான்ஸ் கல்விக் கழகம் இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (51)

## ஏழாலை புனித இசிதோர் ஆலய திருவிழா

03.06.2006

★ வெள்ளிக்கிழமை (02.06.2006) மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும்.

★ யாழ்.மறைமாவட்ட திருப்பணி முதல்வர் அருட்பணி ஜே.நீக்கிலஸ் தலைமையில் சனிக்கிழமை (03.06.2006) காலை 7மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கமக்காரரின் பாதுகாவலர் புனித இசிதோரின் பெருவிழாவில் எம்மோடு இணைந்து இறை புகழ் பாட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித இசிதோர் ஆலயம், ஏழாலை. (50718)(23-32-17-14) பங்குத்தந்தையும் பங்குமக்களும்.

## UNIVERSITY OF COLOMBO CEYLON MEDICAL COLLEGE COUNCIL
## PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION JAN -2007

இலங்கை மருத்துவக்கல்லூரி சபையினால் வருடாந்தம் நடத்தப்படும் மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் ஆனி மாதத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. பயிற்சி மருந்தாளராக பதிவு செய்து, மார்கழி 2006 ஆம் மாதம் இரு வருடங்கள் பூர்த்தியடைந்தவர்கள், தைமாதம் 2007இல் நடைபெறும் எழுத்துப்பரீட்சைக்கு தோற்ற தகுதி உடையவர்கள்.

பயிற்சி மருந்தாளர்களாக சிறிலங்கா மருத்துவ சபையில் பதிவுசெய்ய குறைந்த பட்ச கல்வித்தகைமைகள் :-

G.C.E. A/L இரண்டு விஞ்ஞான பாடங்களில் சாதாரண சித்தியும் இரசாயன பாடத்தில் விசேட சித்தியும் (Credit) மொத்தமாக மூன்று பாடங்கள் ஒரே தடவையில் பெற்றிருக்கவேண்டும். வகுப்புகள் சனி/ஞாயிறு கிழமைகளில் காலை 9.00 மணிக்கு நடைபெறும். (50660)(23-32-17-14)

சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புக்கள் கல்லூரி, 57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## solidar

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

The Solidar Group - ASB (Arbeiter Samariter Bund), NPA (Norwegian People's Aid) and SAH (Swiss Labour Assistance) is now recruiting experienced and qualified engineers for Phase III Reconstruction activity in the Tsunami affected districts of Jaffna (Vadamarachchi East) and Mulaitivu. Solidar is committed to building more than 1,000 permanent homes and a range of associated community infrastructure, including fishing communities, playgrounds, preschools, community centres, water & sanitation and road building. Based in Kilinochchi, Solidar is now recruiting the following positions.

### Project Engineers

Experienced Project Engineers are required to manage and implement housing and community construction projects in coordination with Quality Assurance Officers.

The Project Engineer should have a degree in Civil or Structural Engineering.

He/She should have an extensive construction site supervision experience.

He/She should be flexible about their work schedule. Interested candidates should submit a CV and Cover Latter by email to : ascongshada@sltnet.lk

Alternatively, submissions may be sent by mail to:

**Ms. Ghada Ajami,**
**Project Manager Construction,**
**Solidar Contruction Office,**
**160, milepost, Paranthan, Kilinochchi.**

(C/49482)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# நீர்வேலி வடக்கு அருள்மிகு காளி அம்மன் கோவில் புனருத்தாரண மகாகும்பாபிஷேக சிறப்பு மலர் - 01.06.2006

## ஆலய குருவின் ஆசியுரை


*நீர்வேலி வடக்கு காளி அம்பாள் ஆலய திரிதள கோபுரமும் மற்றும் வசந்த மண்டப மேல் விதானமும் புதிதாகத் திருப்பணி செய்யப்பட்டு இருப்பதில் சந்தோஷமடைகிறோம்.*

*அன்னை பராசக்தியை மஹாகாளி, மகாலக்குமி, மகாசரஸ்வதி என்று மூன்று உருவங்களில் வழிபாடு செய்வது சம்பிரதாயமாக உள்ளது. நவராத்திரி நாள்களில் முதல் மூன்று நாள்களை மகிஷாசுரமர்த்தன், துர்க்கை, காளி என்ற நாமங்களில் வழிபட்டு பேரருளை அடைகின்றோம். தசம மகாஷாகித்யை என்று கூறப்படும் தேவியின் பத்துவித உபாசனையில் காளி அம்மன் முதல் இடத்தில் இருக்கிறாள்.*

*இன்று வைகாசி 18 ஆம் நாள் (01.06.2006) வியாழக்கிழமை பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.*

*எல்லாவகைத் துன்ப துயரங்களிலிருந்தும் மக்களை விடுவித்து அமைதியான வாழ்க்கை அனைவருக்கும் அமைய காளி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசி வழங்குகிறேன்.*

அம்பாள் பணியில்.. தி.சிவகுமாரசர்மா.



## வாழ்த்துரை

*அண்டசராசரங்களின் இயக்கத்திற்குக் காரணமாய் இருக்கின்ற பராசக்தியை அன்னையாகவும் பெண்ணாகவும் கண்டு வழிபடுபவர்கள் இந்துக்கள்.*

*இலங்கையில் நயினையிலே நாகபூஷணியாகவும் திருக்கேதீஸ்வரத்திலே கௌரியாகவும் வற்றாப்பளையிலே கண்ணகையாகவும் கண்டு வழிபட்டார்கள்.*

*நீர்வேலியிலும் காமாட்சி எனவும் மீனாட்சி எனவும் இராஜராஜேஸ்வரி எனவும் காளியம்பாள் எனவும் வழிபட்டு வருகின்றோம்.*

*இன்று அன்னை காளியம்பாள் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறுவது மிகவும் சிறப்பிற்குரியது.*

*1936 ஆம் ஆண்டு சிறிய கட்டடத்திலே வீற்றிருந்த அன்னை, தனது அருட்பிரவாகத்தினால் இன்று இராஜகோபுர அமைப்புடன் மணிக்கூட்டுக்கோபுரம், பரிவார மூர்த்திகளுக்கு தனித்தனி ஆலயங்ள், சுற்றுப்பிரகாரங்கள், அன்னதான மடம் முதலிய அமைப்புகளுடன் கூடிய அழகு, ஆலயத்தில் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ்சாந்தி விழாக் காண்பது எமது கிராமத்துக்கே பெருமை தருவதாகும்.*

*இவ்வன்னையின் ஆலய அமைப்புக்கு உதவிய கட்டடக்கலைஞர்கள், ஓவியர்கள் திருப்பணிச்சபையினர், பரிபாலன சபையினர், வழிபடுவோர் அனைவரையும் பாராட்டுவதோடு அனைவருக்கும் அன்னையின் பேரருள் என்றும் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.*

நீர்வேலி அன்பன்.

## ஆலய வரலாறு ஒரு நோக்கு

*நீர்வேலிக்கிராமம் இந்துமத வளர்ச்சிக்கு தொன்றுதொட்டு நிலைக்களனாயமைத்து பெரும் பங்காற்றி வந்தமை யாவரும் அறிந்த உண்மை.*

*அந்த வகையில் இக் கிராமத்தில் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு மத வழிபாட்டுக்கு இன்றியமையாதனவாக விளங்குகின்றன.*

*நீர்வேலி வடக்கில் 1936 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் வழிபாடாற்றி வந்த ஆலயமே இந்தக் காளியம்பாள் ஆலயமாகும். 'வெளியிலடைப்பு' என்னும் காணியில் சிறிய ஆலயம் அமைத்து வழிபாடாற்றி வந்த மக்களின் அசையாத நம்பிக்கையும், அம்பிகையின் அருளாட்டமுமே ஆலயத்தின் வளர்ச்சிப் படிகளாக அமைந்துள்ளன.*

*சிறிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் காலநீரோட்டத்தில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், சபா மண்டபம், தரிசன மண்டபம், வசந்தமண்டபம், மடைப்பள்ளி, மணிக்கூடு ஆகிய அமைப்புகளுடன் கூடிய ஆலயமாக அமைக்கப்பட்டு, 1962இல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 12 தினங்கள் அலங்கார உற்சவம், திருவெம்பாவை, நவராத்திரி பூசை என்பன நடைபெற்று வந்தன.*

*அதனைத் தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு கார்த்திகை புனர்பூச நட்சத்திரத்தில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதன்பின் பங்குனி உத்தர நட்சத்திரத்தை இறுதி நாளாகக் கொண்டு அலங்கார உற்சவங்களும், நவராத்திரி, திருவெம்பாவை, பங்குனித்திங்கள், சோமவாரம், மாதாந்தம் பிரதி வெள்ளிக்கிழமை திருவிழா என்பனவும் சிறப்பாக ஆடிப்பூரத் திருவிழாவும் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பிள்ளையார், முருகன், ஸ்ரீசக்கரம்,சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தங்களுக்குத் தனித்தனி சந்நிதானங்களும் அமைக்கப்பட்டு வழிபாடாற்றி வந்தமை சிறப்பிற்குரியதாகும். அன்னதான மடம் ஒன்றும் அமைக்கப்பட்டு காலத்துக்குக்காலம் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.*

*இன்று மேலும் அம்பிகையின் அருளாட்டத்தினாலும் அடியார்களின் அயரா முயற்சியினாலும் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதற்கமைய இராஜகோபுரம் அமைக்கப்பட்டதோடு ஆலயத்தின் ஏனைய பகுதிகளெல்லாம் அழகுக்கலை ததும்பும் சிற்ப அமைப்புகளும் ஓவிய அமைப்புகளும் கொண்டதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.*

*இந்திய சிற்பாசாரியார்களினதும் உள்ளூர் சிற்பக்கலைஞர்களினதும் கைவண்ணத்தில் இவ்வாலயம் அழகு ததும்பும் ஆலயமாக அமைக்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.தன்னை நாடிவரும் அடியார்களின் அல்லல் அகற்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் 'காளியம்பாளின் பேரருளை' வேண்டி இனிது வாழ்வோமாக.*

திருப்பணிச் சபையினரும், பரிபாலன சபையினரும்.

## நிர்வாக சபையினரின் வாழ்த்துச் செய்தி

*'அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்',*

*மேற்படி ஆலய அம்பாளின் பேரருளை மனதிலிருத்தி மேற்படி ஆலய திருப்பணி வேலைகளைச் சிறப்புறச் செய்து முடிக்க உதவிய கட்டடக் கலைஞர்கள், வர்ணக் கலைஞர்கள் மற்றும் பல வகைப்பட்ட தொழிலாளர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பினையும் பணியினையும் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகிறோம். குறிப்பிட்ட திருப்பணிகள் இனிது நிறைவேற காலத்துக்குக்காலம் நிதி உதவி, பொருளுதவி, சரீர உதவி புரிந்த அனைவரையும் எம்மால் மறக்கமுடியாது.*

*இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தைச் சிப்புற நடத்தி வைக்கின்ற சிவாச்சாரியப் பெருமக்களையும் பாராட்டுகிறோம்.*

*அனைவருக்கும் அம்பிகையின் பேரருள் என்றும் கிடைக்கவேண்டும் என அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.*

திருப்பணிச்சபையினரும் பரிபாலன சபையினரும்.

(50689) (39-32-17-14)

# கட்டடப் பொருள்கள் எடுத்துவரத் தடை விதிப்பு: அனைத்து நிர்மாணப் பணிகளும் ஸ்தம்பிதம்

கரவெட்டி,ஜூன்1

கட்டட நிர்மாணப் பொருள்களைத் தெற்கிலிருந்து வடக்கிற்கு எடுத்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வடமராட்சியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைக்கும் பணிகளைத் தொண்டு நிறுவனங்கள் பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றன. புதிய வீடுகள் நிர்மாணிக்கும் பணிகளும் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்றுவந்தன.

இந்நிலையில் கட்டட நிர்மாணப் பொருள்களான சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள் என்பவற்றைத் தெற்கிலிருந்து வடக்கிற்கு எடுத்துச் செல்வதை பாதுகாப்பு அமைச்சு தடை செய்துள்ளது.

இதனால் கட்டடப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன என தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட மக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

குடாநாட்டில் இடம்பெற்று வந்த அரச, திணைக்கள, தனியார் கட்டடப் பணிகள் அனைத்தும் முற்றாக முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மேசன், மரவேலை, கூலித் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பின்றி பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டிலுள்ள அரசாங்க வைத்திய சாலைகள், உலக வங்கியின் வீடமைப்புத் திட்டப்பணிகள் மற்றும் அத்தியாவசிய கட்டுமானப் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன என இப்பணிகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (30-70)

## பெற்றோல் கடத்தியவர் விளக்க மறியலில்

தென்மராட்சி,ஜூன் 1

காரில் பெரிய எண்ணெய்த் தாங்கி அமைத்து அதில் 170 லீற்றர் பெற்றோலை கடத்த முயன்ற நபர் முகமாலையில் படையினரிடம் பிடிபட்டார். இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந் நபரை கொடிகாமம் பொலீஸார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (117)

## தாவீது அடிகளின் நினைவு கூரல் இன்று

கொழும்புத்துறை,ஜூன் 1

யாழ். நூலகத்திற்கு இட்ட தீயினால் உள்ளம் நொந்து மரணித்த தமிழ்ப் பற்றாளர் தாவீது அடிகளின் 25 ஆவது நினைவு தினம் இன்று நினைவு கூரப்படவுள்ளது.

கத்தோலிக்க சபை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 6 மணிக்கு யாழ். அருள் ஆசிரமத்தில் நினைவு இரங்கல் திருப்பலி ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது. (30)

# தொழில் நிலையங்களில் பணிபுரிவோரின் பாதுகாப்புக் குறித்து அறிவுறுத்தல் நூல்

## தென்மராட்சியில் விநியோகம்

தென்மராட்சி,ஜூன் 1

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் ஆபத்தை விளைவிக்கும் தொழில் நிலையங்களில் கடமையாற்றுவோரின் பாதுகாப்பு தொடர்பான விளக்க நூல்கள் அந்தந்த தொழில் நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மின்வாயு ஒட்டு நிலையங்கள், மர அரிவு காலைகள், தளபாட உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோரின் நலன் கருதி படங்களுடன் கூடிய நூல்கள் வழங்கப்படவுள்ளன.

மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனை பொறியியலாளர் சி.மகேந்திரதாசன் இந் நூலை வழங்கியுள்ளார்.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கும் தொழில் நிலையங்களின் உரிமையாளர்கள் இந் நூல்களை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி கேட்டுள்ளார். (117)

# பெரியவிளானில் மிதிவெடி அகற்றிய பகுதி கிராம சேவையாளரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 1

பெரியவிளான் சந்திப் பகுதியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் கடந்த 25ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஜே.153 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 58 ஆயிரத்து 700 சதுர மீற்றர் பரப்பளவில் 256 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தினால் ஜே.153 கிராம சேவையாளர் எஸ்.சூரியகுமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (190)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஆனைக்கோட்டை விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி விநாயகர் ச.ச.நிலைய தலைவர் க.இராசேந்திரம் தலைமையில் இடம்பெற்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் வை.சந்திரராஜா மங்கள விளக்கேற்றி சிறப்புரையாற்றினார். (185)

## இரவுநேர வகுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்1

அல்லைப்பிட்டி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் தங்கியுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இரவுநேர வகுப்புக்களை யாழ். சமூக செயற்பாட்டு மையத்தினர் மாலை ஆறுமணி தொடக்கம் 8 மணி வரை நிலைய மண்டபத்தில் நடத்தி வருகின்றனர் என யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் என்.சுகிர்தராஜ் தெரிவித் தார். (190)

## திருவிழிப்பு ஆராதனை

கொழும்புத்துறை,ஜூன் 1

தூய ஆவியார் பெருவிழாவையொட்டி திருவிழிப்பு ஆராதனை எதிர்வரும் சனிக்கிழமை மாலை தொடக்கம் ஞாயிறு அதிகாலை வரை யாழ்.போராலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் திருவிழிப்பு ஆராதனை ஞாயிறு அதிகாலை யாழ்.ஆயரின் திருப்பலியுடன் நிறைவடையும் என ஆயர் இல்லச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயத்த வழிபாடுகள் இன்றும் நாளையும் மாலை 5.30 மணிக்கு இடம்பெறும். (30)

## பாஷையூர் அந்தோனியார் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன் 1

பாஷையூர், புனித அந்தோனியார் ஆலய பெருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

4ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை மாலை 5 மணிக்கு நவநாள் ஆராதனைகள் இடம்பெறும்.

12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத் தொடர்ந்து நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

13ஆம் திகதி காலை 5.30 மணிக்கு முதற் திருப்பலி இடம்பெறும். காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியை யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஒப்புக்கொடுப்பார்.

மாலை 4 மணியளவில் புனிதரின் தேர்ப் பவனியும் அதனைத் தொடர்ந்து ஆசீரும் இடம்பெறும். (190)

# வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு ஆளணித் தேவை குறித்து ஆராய குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் புதிய ஆளணி கோப்பினை தீர்மானிப்பதற்கு பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழு விரைவில் விதந்துரைகளை வழங்கவுள்ளது.

மேற்படி விதந்துரை அறிக்கையின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி கோப்பைத் தீர்மானிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

''உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி கோப்பினை தீர்மானம் செய்தல்'' என்ற தலைப்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப்பிள்ளை சகல சபைகளின் செயலாளர் கவனத்திற்கு அறிக்கை அனுப்பியுள்ளார்.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் ஆளணி கோப்பினை தீர்மானிக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட வழிமுறைகள் வேறுபாடாக இருக்கின்றன.

இதனால் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணிக் கோப்பினை சரியான முறையில் தீர்மானிப்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், தற்போது உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கடமைகள், மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் கடமைகள் அதிகரித்து வருவதன் காரணமாகவும் -

1994 இல் அனுமதிக்கப்பட்ட ஆளணித் தொகை தற்போதைய தேவைக்குப் பொருத்தமற்றதாகக் காணப்படுவதனாலும் - மேற்காட்டப்பட்டவாறு நடவடிக்கை எடுக்க பிரதம செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டது.

எனவே, உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி கோப்பினை தீர்மானிப்பதற்கான வழிமுறைகள், உள்ளூராட்சி மன்றங்களின் வருமானம் தொடர்பில் குடிதண்ணீர், மின்சாரம் தொடர்பான வருமானங்கள் தவிர்ந்த -

வருடாந்தம் மீண்டுவரும் வருமானத்தின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு இதன் அடிப்படையில் ஒவ்வொரு வகையான உள்ளூராட்சி மன்றத்திற்கும் உத்தேசமான ஆகக் குறைந்த ஆளணிக் கோப்பினைக் கொண்ட அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை ஒவ்வொன்றினதும் பரப்பளவு, சனத்தொகை செயற்பாட்டின் சிக்கலான தன்மை மற்றும் விசேட காரணிகள் என்பவற்றின் பிரகாரம் ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டுள்ள ஆளணி கோப்பிலுள்ள எண்ணிக்கையை விட மேலதிகமான ஆளணிக் கோப்பு தேவைப்படவும் கூடும்.

எனவே, வடக்கு -கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றினதும் ஆளணிக் கோப்பினை தீர்மானிக்கும் முகமாக -

பிரதம செயலாளரினால் அமைக்கப்பட்ட குழுவிற்கு முன் தங்கள் கோரிக்கைகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இதற்கு உதவும் முகமாக சகல சபைகளின் செயலாளர்களும் குழு விசாரணையின் போது அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தயாராக வேண்டும் - என்றுள்ளது. (185)



சிலிங்கோ ஆயுட் காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்த சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.கிரிதரன் மரணமானபின் அவருக்கான மரண இழப்பீட்டுத் தொகையை (2 லட்சம்) அவரது சகோதரனிடம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய விற்பனை முகாமையாளர் பா.நந்தகுமார் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் விற்பனை ஆலோசகர் கு.சஞ்சீவும் காணப்படுகின்றார்.

## கச்சேரி - நல்லூர் வீதியில் இரண்டு வீடுகளில் கொள்ளை

கொழும்புத்துறை,ஜூன்1

கச்சேரி - நல்லூர் வீதியில் மூத்த விநாயகர் ஆலயப் பகுதியில் கடந்த திங்களிரவு இரண்டு வீடுகளில் பல லட்சம் பெறுமதியான தங்கநகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

ஆயுதங்கள் சகிதம் முகத்தை மறைத்துக் கட்டியபடி வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டிலுள்ளோரை மிரட்டி பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

திருடர்களுடன் ஏற்பட்ட இழுபறியில் வீட்டில் உள்ள ஒருவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும் -

கொள்ளையரில் ஒருவரின் அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகில் உள்ள வீட்டில் 20லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் -

இன்னுமொரு கடையிலும் வீட்டிலும் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பனவும் கொள்ளையிடப்பட்டுள்ளன. (30)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உணவுக்கான பயிற்சி விரைவில்

## உலக உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தும்

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர், உதவி ஆசிரியர் ஆகியோருக்கு உணவிற்கான பயிற்சி **(Food For Training)** என்ற அடிப்படையில் உலக உணவு வேலைத் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் எண்ணூற்று 90 முன்பள்ளிகளில் கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி தொடர்ந்து 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

அவர்களது மொத்த மனித பயிற்சி நாள்களுக்கு உலர் உணவு வழங்குவது குறித்து யாழ்.அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பயிற்சித் திட்டம் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக சனசமூக அபிவிருத்தி அலுவலகம், பிரதேச சபை என்பவற்றின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (185)

## இடமாற்றம்

வலி.மேற்கு,ஜூன்1

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய இரண்டு அரச முகாமைத்துவ உதவியாளர்கள் இன்றுமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆ.பிரணவபவா யாழ்ப்பாணம் செயலகத்துக்கும் செல்வி கே.கௌரிதேவி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (175)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




இளவாலையைச் சேர்ந்த
ஜெயக்குமார் செல்வமணி தம்பதியரின்
செல்வப் புதல்வன்
கிரிஷாந்தன் தனது
முதலாவது பிறந்தநாளை
இன்று வியாழக்கிழமை
இத்தாலியில் தனது
இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.
கிரிஷாந்தனை அன்பு அப்பா,
அம்மா, அக்கா கீர்த்தனா,
கோண்டாவிலில் வசிக்கும்
அம்மம்மா, பெரியம்மா,
அண்ணா, அண்ணி,
இளவாலையில் வசிக்கும்
அப்பம்மா, அத்தைமார்,
மாமாமார், பெரியப்பா,
சித்தப்பாமார்,பெரியம்மா,
மச்சான்மார்,மச்சாள்மார்,
கனடாவிலுள்ள மாமா,
அத்தை, மச்சான்
புத்தளத்திலுள்ள
பெரியம்மா, பெரியப்பா,
அண்ணாமார், அக்கா
மற்றும் உற்றார்,
உறவினர்கள் பல்கலையும்
கற்று பல்லாண்டு காலம் வாழ்க
என வாழ்த்துகின்றார்கள்.

கோண்டாவில்.
(சி.49463) (39-17-14)
தி.ரமேஸ்கரன் (அண்ணா).

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கண்மகிழ
14
..
10
.
1935

கண் நெகிழ
12
.
06
.
2005

அமரர் Dr. மயில்வாகனம் இராசையா
(Rmo- Velanai Govt. Hospital)

ஆண்டு தான் ஒன்று போச்சு
அன்புமா போகும் அப்பா!
ஈண்டு நாம் மகிழ்ந்து வாழ
ஏற்றவை செய்த தெய்வம்!
மறைந்திடவில்லை எங்கள்
மனதிலே என்றும் வாழும்
தூண்டிடா மணி விளக்கே!
சுடர்கிறீர் உயிரினுள்ளே
ஆண்டு ஒன்று ஆனாலும்
அகலவில்லை உங்கள் நினைவு.

நாவலடி,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
- குடும்பத்தினர்.
(சி.49466) (39-17-14)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மனம் மகிழ
28
07
1980
மனம் நெகிழ
18
04
2006

அமரர் செல்லன் கமலதாசன்
(கமல்)

எங்கள் கமலதாசன்
பெண்ணவர் ஐவருக்கு ஏக சகோதரனாக
வண்ணமுற வளர்ந்து கல்வி பயின்று
எண்ணமாக தொழில் வளர்த்து
திண்ணமாக நின்ற காலை
கண்பட்டதோ காலன் சுடு குறி
உன்னை பத்து மாதங்கள் சுமந்த
கருவறை கலங்கி வாடுதே!
உன் நினைவால் வாடுகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய
புதுவை ஈஸ்வரத்தான் துணை வேண்டுகின்றோம்.

நாளை (02.06.2006 ) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(50652) (39-17-14)

தகவல்:
ஊறணி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
தந்தை, தாய், அக்காமார்,
தங்கை, மைத்துனர்மார், மருமக்கள்.

ஸ்ரீராம ஜெயம்

# ஐந்தாவது பிறந்தநாள் வாழ்த்து




கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
திருஞானசெல்வன் - சசிகலா
தம்பதியரின் செல்வப்புதல்வன்
சஞ்சீவ்
தனது 5 ஆவது பிறந்தநாளை
இன்று (01.06.2006)
வியாழக்கிழமை
டென்மார்க்கிலுள்ள தனது
இல்லத்தில்
வெகுவிமரிசையாகக்
கொண்டாடுகின்றார். இவரை
அன்பு அப்பா, அம்மா,
டென்மார்க் பெரியப்பா,
பெரியம்மா, அக்கா,கனடா
சித்தப்பா,மாமா,
யாழ்ப்பாணத்திலுள்ள
அப்பப்பா, அப்பம்மா, மாமா,
மாமி, மச்சாள், மச்சான்மார்,
உடுப்பிட்டியிலுள்ள அம்மம்மா,
பெரியப்பா,பெரியம்மா,
அண்ணா,சித்திமார் மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்
நாராயணன் அருள் பெற்று
பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும்
பெற்று நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.

(50657) (39-17-14)

யாழ்ப்பாணம். தகவல்: அப்பப்பா.

## சொகுசான நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
13
05
1985

உதிர்வு
18
04
2006

அமரர் மகாதேவா கிசோக்குமார்

கடந்த 18.04.2006 அன்று அகால மரணமடைந்த எமது புத்திரன் மகாதேவா கிசோக்குமார் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (02.06.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

❋ இவருடன் மரணித்த சக நண்பர்களையும் இந்த நாளில் நினைவு கூருகின்றோம்.

"வசந்த வாசா"
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
- குடும்பத்தினர்.
(50594)(89-17-14)

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர் பாலசுப்பிரமணியம்
கன்னதாசன்
(கண்ணன் ஓட்டோ உரிமையாளர்)

தாயின் கருவறையில்
04.07.1979

துப்பாக்கி முனையில்
18.04.2006

திதி: 01.06.2006

பண்பிலே சிறந்தவனே!
பார் போற்றும் உத்தமனே!
சன்னமாக வந்த காலன்- உனை
சாவடித்த காரணம் யாதோ?
சடுதியாக நீ மறைந்த செய்தி கேட்டு
கதி கலங்கி வாடுகின்றோம்
பதறுகின்றோம் உன் பிரிவால்
பரிதவிக்கின்றோம் இழப்பால்
மாதங்கள் ஒன்றரை ஓடி மறைந்தாலும்
மாறாது உந்தன் நினைவுகள்- எம்
நெஞ்சில் நம் உயிர் உள்ளவரை
நித்தமும் வேண்டுகின்றோம்
உன் ஆத்மா சாந்திக்காக.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடனிருந்து உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று(01.06.2006) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (50644) (89-17-14)
S.பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.


## மிதிவண்டி வழங்கல்

அறவழி நிலையத்தினால் நடத்தப்படும் தொழில் பயிற்சியில் கலந்து கொள்ளும் 25 பயிலுனர்களுக்கு அண்மையில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அறவழி நிலையமும் உலக கனேடிய பல்கலைக்கழகமும் இணைந்து இளைஞர்களுக்கான வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிகள் கைதடி- நுணாவில் பயிற்சி நிலையத்தில் வழங் கப்பட்டு வருகின்றன.

இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளும் பயிலுனர்களுக்கு பயணப்படி வழங்குவதற்குப் பதிலாக மிதிவண்டிகள் கொள்வனவு செய்து வழங்கியதாக நிலையத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தெரிவித்தார்.

மிதிவண்டி வழங் கப்படும் நிகழ்வில் உலக கனேடிய பல்கலைக் கழக யாழ். மாவட்டப் பிரதிநிதி சிவகுமார் கலந்து கொண்டார்.

(117)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக முதுமாணி- அபிவிருத்தி கற்கைநெறிக்கான விரிவுரைகள் கடந்த வார இறுதி நாள்களில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

அடுத்தவாரம் முதல் விரிவுரைகள் நண்பகல் வரை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (185)

## காணியில்லாத குடும்பங்களின் விவரம் சேகரிப்பு

குடாநாட்டில் குடியிருப்புக்குரிய காணி இல்லாத குடும்பங்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

மாவட்ட செயலகத்தினரால் குடியிருப்பதற்குரிய காணி இல்லாத சகல குடும்பங்களின் விவரங்களும் திரட்டப்படுகின்றன. இது தொடர்பான சுற்றறிக்கையொன்றினை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (175)

## வாகனம் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூன் 1

சாவகச்சேரி நகரசபை வீதி அபிவிருத்திப் பணிக்கென மோட்டார் கிறைண்டிங் வாகனம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் குடியரசினால் இவ் வாகனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## ஆஸி. செஞ்சிலுவைக் கிளை மீண்டும் இயங்குகிறது

நல்லூர்,ஜூன் 1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் இயங்கிவந்த ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கக்கிளை மீண்டும் இயங்கத் தொடங்கியது.

அண்மையில் ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கக் கிளைப் பிரதிநிதிகள் யாழ். நகரை விட்டு வெளியேறியதை அடுத்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

முதலுதவிக்குப் பொறுப்பான அதிகாரியின் வரவைத் தொடர்ந்து மீண்டும் கிளை இயங்க ஆரம்பித்துள்ளது. (111)

## தென்மராட்சி அணிகள் இறுதியாட்டத்திற்கு தெரிவு

தென்மராட்சி,ஜூன் 1

மாகாண மட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்ற தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கைதடி - நாவற்குழி அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த 17 வயது, 15 வயது ஆகிய பிரிவு அணிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளன.


திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டிகளில் இந்த அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

17 வயதுப் பிரிவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியுடனும், 15 வயதுப் பிரிவில் சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலய அணியுடனும் இறுதிப் போட்டிகளில் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அணிகள் மோதின.

கடந்த வருடம் இடம்பெற்ற மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் இப் பாடசாலையைச்சேர்ந்த 15 வயதுப் பிரிவுப் பெண்கள் அணி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (117)

# அறிவுப் பசியைத் தீர்த்த அறிவாலயம் தீயின் பசிக்கு இரையான வரலாறு

*ஈழத்தமிழர்களின் அரும்பொக்கிஷமாகக் கருதப்படும் யாழ்.பொதுசன நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு இன்றுடன் 25 வருடங்கள் பூர்த்தியடைகின்றது. பொதுசன நூலகத்தின் வரலாற்று சிறப்பு அதன் இன்றைய நிலை குறித்து விளக்கின்றது இந்தக்கட்டுரை.*



இற்றைக்கு கால்நூற்றாண்டு காலத்திற்கு முன்பு ஈழத்தமிழ் மக்களின் அறிவாலயமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் (01-06-1981) இல் தீக்கிரிரையாக்கப்பட்டது. அன்றைய காலத்தில் ஈழமணித் திருநாட்டை ஆட்சி செய்த அரசின் அமைச்சர்கள் பச்சைக்கொடி காட்டப்படையினர் நூலகத்திற்கு தீ வைத்தார்கள். அனுமானின் வாலில் மூட்டிய தீ இலங்காபுரியை அழித்த வரலாற்றினை இராமாயணம் கூறுகிறது. அரசின், அமைச்சர்களின் ஆசீர்வாதத்துடன் கலைமகள் வீற்றிருக்கும் பொதுசன நூலகத்திற்கு வைத்த தீ இன்றுவரை இலங்கையை எரித்துக் கொண்டே இருக்கிறது.

தென்கிழக்காசியாவிலே சிறந்தொரு நூலகமாக யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் மிளிர்ந்தது. வித்தூன்றி முளைகண்டு உரமிட்டு நீரூற்றி விருட்சமாகக் கனியும்வேளை இந்நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது. அறிவுத்தாகத்தையும் ஞான வேட்கையையும் தீர்ப்பதற்காக நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்டதே யாழ்ப்பாண நூலகம் ஆகும்.

1934 ஆம் ஆண்டு ஆனிமாதம் 9 ஆம் திகதி கலாநிதி ஐசக் தம்மையா தலைமையில் நடைபெற்ற கூட்டம் பொது நூலகத்தின் தோற்றத்திற்கு அடிகோலியது. யாழ். மாவட்ட நீதிமன்றத்தின் செயலாளராக இருந்த செல்லப்பா அவர்கள் இந் நூலகத்தின் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றினார். செல்லப்பா சேகரித்த பணம் ரூபா 1184.22 நூலகத்திற்கான மூலதனமாக அமைந்தது. 01-08-1934 இல் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகரசபையின் மேயராக சாம் ஏ.சபாபதி இருந்த காலத்தில் நவீன நூல் நிலையம் அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. 14-06-1952 இல் சாம் ஏ.சபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவீன வசதிகள் கொண்டதாக யாழ்ப்பாணம் பொது சன நூலகம் அமைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 29-03-1953 இல் நவீன நூல் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 15,910 சதுர அடிகளைக் கொண்ட மிகப் பிரமாண்டமான அமைப்பாக நூல் நிலையம் அமைக்கப்பட் டது. கொழும்பு மாநகரசபை நூல் நிலையத்தை விடப் பெரியதாக அமைந்தது. 11-10-1959 இல் யாழ்.மாநகரசபையின் முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பா பொது சன நூலகத்தைத் திறந்து வைத்தார். வணக்கத்திற்குரிய லோங் அடிகளார் நூலகம் உருவாவதில் பெரும் பங்காற்றினார்.

எரிக்கப்பட்ட நூல் நிலையத்தின் அங்கங்களாகப் பின்வருவன அமைந்திருந்தன.

1. நூல் இரவல் வழங்கும் பகுதி
2. புதின ஏடுகளையும் சஞ்சிகைகளையும் கொண்ட வாசிகசாலை
3. சிறுவர் நூலகம்
4. உசாத்துணை நூல்கள் கொண்ட பகுதி
5. கருத்தரங்குக் கூடம்
6. கலாபவனம்
7. காரியாலயமும் நூற் சேமிப்பு அறையும்

நூலகம் எரிக்கப்பட்ட பொழுது 97000 புத்தகங்கள் நூலகத்தில் இருந்தன. நூல்களை விட மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் சம்பந்தமான ஓலைச் சுவடிகள் நூற்றுக் கணக்கானவை காணப்பட்டன. இரவல் வழங்கும் பகுதியில் 57,000 நூல்கள் இருந்தன. இவற்றில் 1/5 பகுதி நூல்கள் தமிழ் நூல்களாகவே காணப்பட்டன. உசாத்துணைப் பிரிவில் மிகவும் அரிதான விலைமதிக்கவொண்ணாத பெருந்தொகையான நூல்கள் வைக்கப்பட்டிருந்தன.

உசாத்துணைப் பிரிவில் பெறுமதிமிக்க 29,500 நூல்கள் இருந்தன. 60 வாசகர்கள் இருந்து படிப்பதற்காக தனித்தனி மேசை, கதிரைகள் உசாத்துணைப் பிரிவில் காணப்பட்டன. சிறுவர் பகுதியில் 8,995 நூல்கள் இருந்தன. 10 ஆயிரம் அரிய கையெழுத்துப் பிரதிகளும் நூலகத்தில் வைக்கப்பட்டு இருந்தன. கேட்போர் நிலையப் செவிக்குறைவு வழங்கும் இடமாக அமைந்திருந்ததோடு அறிவியல் ரீதியான விவரணப் படங்களை காண்பிக்கும் இடமாகவும் திகழ்ந்தது. ஆழ்நிவத்தியானம் பற்றி திரு.தொ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் உரையை இம் மண்டபத்தில் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதேபோல அப்பலோ - 11 இன் விண்வெளிப் பயணத்தின் விவரணப் படத்தினைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. இதேபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகள்கேட்போர்கூடத்திலேஇடம்பெற்று வந்தன. பத்தொன்பதாயிரம் அங்கத்தவர்கள் இந்த நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்ற வாசித்துப் பயன் அடைந்து வந்தார்கள்.

பல்கலைக் கழகத்திற்குச் செல்லாதவர்கள் பலர் நூலகங்களைப் பயன்படுத்தியே தமது அறிவினை வளர்த்துக் கொண்டார்கள்.

இத்தகைய சிறப்புகள் மிக்க யாழ்.பொது நூலகத்திற்கு 01.06.1981 ஆம் திகதி நள்ளிரவு நேரம் யாழ்.விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலீஸார் தீ மூட்டினர். பொலீஸ் மா அதிபரும் பிரிகேடியர் வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருந்தவேளையில் தீ மூடப்பட்டது. தீயை அணைக்கச் சென்றவர்களையும் அவர்கள் தடுத்தனர். பொதுசனநூலகத்திற்கு ஏற்பட்ட அழிவு கல்வியை அடிநாதமாகக் கொண்டு உருவாகி வந்த சமூகத்தின் கலாசாரப் படுகொலையாகவே காணப்பட்டது. சுவாமி ஞானப்பிரகாசரின் மாணவராகிய ஒப்பியல் ஆய்வாளர் தாவீது அடிகள் பொது நூல் நிலையம் எரிகிறது என்ற தகவல் கிடைத்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியினால் உயிரிழந்தார். பல அறிஞர்களும் கல்விமான்களும் மனவேதனை அடைந்து கண்ணீர் விட்டார்கள். பொதுசன நூலகத்தைப் பயன்படுத்தி தனது அறிவுப் பசியினைத் தீர்த்து வந்த மாணவர்களும் இளைஞர்களும் விரக்தியின் விளிம்பிற்குச் சென்றார்கள்.

கல்வியிலே மட்டும் நாட்டம் கொண்டு கட்டுப்பாடான சமுதாயமாக இருந்த நமது இளைஞர்களைத் திசைதிருப்பிய காரணிகளில் தரப்படுத்தல், நூலக எரிப்பு, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் ஆகியன அனைத்துமே காரணமாக அமைந்தன.' எந்த ஓர் உயிரையும் இம்சிக்காதே' என்பது புத்த பகவான் போதித்த அறநெறியாகும். தவயோதியாக வாழ்ந்த போதி மாதவன் தர்மத்தின் வலிமையினை உலகிற்கு உணர்த்தி வைத்தார். போதி மாதவனின் போதனைகளைச் சாதனைகளாக்குகின்றோம் என்பவர்களின் சிந்தனையினாலும் செயற்பாட்டினாலும் தர்மதுவீபம் ஆகிய நமது நாட்டில் இன்று இரத்த ஆறு ஓடுகிறது. மரணங்கள் மலிந்த பூமியாக நாம் வாழும் நாடு மாறி வருகிறது. அவல மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

புத்த பகவானின் போதனைகளைப் பின்பற்றும் வாரிசுகள் எனக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் இருப்பவர்கள் இந்த நாட்டில் மரண ஓலங்களை நிறுத்தி அழிவுகளை தடுத்து தர்ம துவீபமாக மீண்டும் நமது நாட்டினை உருவாக்க முயற்சித்தல் வேண்டும். 'தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை' என்ற கம்பனின் வாக்கிற்கு அமைய சமூகத்திற்கும் பயன்படும் நல்ல காரியங்களைச் செய்கின்ற பொழுது ஏற்படும் தடைகளைத் தாண்டுகின்ற மனோபலம் நாட்டினை ஆள்பவர்களுக்கு ஏற்படல் வேண்டும் 'குடி உயரக் கோன் உயரும்' என்பதே தமிழ் மூதாட்டி ஒளவையின் வாக்கும் ஆகும்.

**விறன் மிண்டர்**

# பூநகரிப் பிரதேச உணவகங்களில் சுகாதாரம் பேணுமாறு கோரிக்கை

பூநகரி,ஜூன் 1

பூநகரிப் பிரதேசத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென தமிழீழ சுகாதார சேவைகளின் பூநகரிப்பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

உணவகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் பற்றி வெளியிட்டுள்ள விதிமுறைகள் வருமாறு :-

* கேட்கப்படும் உணவுப் பண்டங்களை மட்டுமே உணவகங்களுக்கு வருபவர்களுக்கு வழங்க வேண்டும்.
* உணவுப் பொருள்களை எடுப்பதற்கு இடுக்கிகள் பயன்படுத்தப்படவேண்டும்.
* உணவகங்களில் கடமைபுரியும் தனிநபர் சுகாதாரம் கடைப்பிடிக்கப்படவேண்டும்.
* உணவு பரிமாறுவோர் சுகாதாரத்தைப் பேணும் மேலங்கிகளை அணிந்திருக்க வேண்டும்.
* உணவு நிலையச் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும்.
* கைகழுவும் இடங்களில் சவர்க்காரம் இருத்தல் வேண்டும்.
* கொதித்தாறிய நீரை குடிப்பதற்கு வைக்கவேண்டும்.
* கழிவு நீர் சுகாதார முறைப்படி அகற்றப்படவேண்டும்.
* கைகள் கழுவிய பின்னர் துடைப்பதற்கு நீர் உறுஞ்சும் தாள்களைப் பயன்படுத்த வேண்டும்.
* உணவகங்களுள் புகைப்பது தடை செய்யப்படவேண்டும்.

இந் நடைமுறைகளை உணவு கையாளும் நிலையங்கள் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் குறிப்பிட்ட நிலையத்தை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (403)

# நீர் வெறுப்பு நோயைத் தடுப்பதற்கு இம்மாதம் விசேட நடவடிக்கை

### விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தீவிரம்

கிளிநொச்சி,ஜூன் 1

தமிழீழ சுகாதார சேவையின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் ஜூன் மாதத்தை நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுதியுள்ளனர்.

இதனையடுத்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

பல்வேறு இடங்களிலும் நீர் வெறுப்பு நோய் தொடர்பானகருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் மாநகர சபைகள், பிரதேச சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் ஆகியவற்றின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாயொழிப்பு, வளர்ப்பு நாய்களுக்கு உரிமம் வழங்கல், கழுத்துப்பட்டி வழங்கல், தடுப்பூசி போடுதல் போன்ற நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட வேண்டுமெனவும் -

நீர்வெறுப்பு நோய் தொடர்பாக நடத்தப்படும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு அது தொடர்பான அறிவைப் பெற்று இந்நோயில் இருந்த எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றும் - தமிழீழ சுகாதார சேவையின் தொற்று நோய் தடுப்புப் பிரிவினர் மக்களிடமும் உரிய அதிகாரிகளிடமும் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இக்காலப் பகுதியில் ஆயிரம் கட்டாக்காலி நாய்களை பிடித்தழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் -

இக்காலத்தில் கட்டாக்காலி நாய்களை பிரதேச சபையின் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்களிடம் ஒப்படைப்பவர்களுக்கு நாய் ஒன்றுக்கு ரூபா 40 ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

(405-352)

# வன்னியில் பரவலாக தற்காப்புப் பயிற்சிகள்

கிளிநொச்சி,ஜூன்1

வன்னிப் பெருநிலப்பரப்பில் பல்வேறு இடங்களிலும் தற்காப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முழங்காவில் பிரதேசத்தில் இரண்டாம் கட்ட தற்காப்புப் பயிற்சிகள் அண்மையில் முழங்காவில் இரணைமா நகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

வட்டக்கச்சி மாயவனூர் கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நிறைவு நிகழ்வுகள் கடந்த 25ஆம் திகதி மாயவனூரில் நடைபெற்றது.

வட்டக்கச்சி தட்சன் வீதிகளுக்கான தற்காப்புப் பயிற்சிநெறி கடந்த 26 ஆம் திகதி நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மக்களுக்கான கட்டுமானப் பயிற்சிகள் இரணைப்பாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

(405-352-353)



*வேரவில் இந்து மகாவித்தியாலயத்தில் புதியவகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.*

*அப்பகுதி கிராம அலுவலர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் வ.இளங்குமரன் நிற்பதையும் - கட்டடத்திற்கான அடிக்கல்லை பூநகரி உதவி அரச அதிபர் மா.சிறீஸ்கந்தகுமார் நட்டுவைப்பதையும் - படங்களில் காணலாம்.* [16]

**B.A.** (FINAL) யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)

**புதிய பிரிவு விரிவுரைகள்**

**ஆரம்பம்:**

**03.06.2006 (8 மணி)**

நிர்வாகி :
S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(50057)(32-17-11)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்துரை கனகசபை**

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி)

திதி: 01-06-2006

நேசம் கொண்ட உறவு எல்லாம் நெகிழ்ந்து
மனம் உருகி நிற்க
நேற்று நடந்தது போல் நெஞ்சமெல்லாம்
வலியெடுக்க கலங்கி வாடுகின்றோம்.

ஈஸ்வரி இல்லம்,
மட்டுவில் தெற்கு.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

(50715)(26.15.45)

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)

**எமது சங்கத்திற்கு பின்வரும் பதவிகளிற்கு பணியாளர்களினை**

**ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகிறது**

01. பொது முகாமையாளர் 101/08
சம்பள அளவுத்திட்டம் 5250 - 120X10 - 130X10 - 7750 (31/99)

**கல்வித்தகைமைகள்:-**

அ) கூட்டுறவுச் சங்கப்பணியாளர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 10ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்குறித்த பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர் பிரிவில் சித்தி அல்லது க.பொ.த.(உ.த) இல் 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

02. கணக்காளர் - 104/10
சம்பள அளவுத்திட்டம் (31/99) 4750 -100X10-110X10 -6850/=

**கல்வித்தகைமைகள்:-**

அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளரின் 12 ஆவது சம்பளத்திட்டத்திலான மேற்குறித்த பதவிகளில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு துறையிலான பதவியில் இரண்டு வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கு துறையிலான பதவியில் நான்கு வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் உயர்பிரிவில் சித்தி/க.பொ.த.(உ.த) கணக்கியல் உள்ளடக்கியதாக மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் 04 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

03. அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர் 201/13
சம்பள அளவுத்திட்டம் (31/99) 4000 -75 X 10 - 80 X 10-5550/=

**கல்வித்தகைமைகள்:-**

அ) கூட்டுறவுச்சங்கப்பணியாளர் 14 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 02 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

04. தட்டெழுத்தாளர் 305/15
சம்பள அளவுத்திட்டம் (31/99) 3500-65X10 -70X10-4850/=

**கல்வித்தகைமைகள்:**

அ) க.பொ.த.(சாதாரணம்) இல் தொடர்புபட்ட மொழி உட்பட 06 பாடங்களில் சித்தியும், சிங்கள/தமிழ் தட்டெழுத்து நிமிடத்திற்கு 20 சொற்கள் அல்லது ஆங்கில தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 30 சொற்கள்.

05. காசாளர் 306/15
சம்பள அளவுத்திட்டம் (31/99) 3500-65X10 -70X10 -4850/=

**கல்வித்தகைமைகள்:**

அ) கூட்டுறவுப்பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்திலான ஒத்த பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப்பணியாளர் சாதாரன பிரிவில் சித்தி அல்லது க.பொ.த.(சா/த) இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியும், காசாளர்/வியாபார நடவடிக்கையில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

06. சாரதி:- 312/15 (இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லான்மாஸ்ரர்)
சம்பள அளவுத்திட்டம் (31/99) 3500-65X10 -70X10 -4850/=

**கல்வித்தகைமைகள்:**

அ) ஐந்தாம் வகுப்பு சித்தியுடன் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரமும் சம்பந்தப்பட்ட தொழிலில் 04 வருடங்களிற்கு குறையாத அனுபவம்.

**குறிப்பு:-**

1) மேற்குறித்த அனைத்து பதவிகளிற்கான சம்பளத்திட்டத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கமைவாக ரூபா 1250+2500/=உம் சேர்த்து வழங்கப்படும்.
2) வயதெல்லை 18-40. வயதெல்லையில் கூட்டுறவுச்சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் சங்கப்பணியாளர் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் சங்கத்தினூடாக அனுப்புதல்வேண்டும்.
3) விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத்தயாரித்து பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பூரண விவரம் சமர்ப்பிக்கப்படாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
4) விண்ணப்ப முடிவு திகதி: 14-06-2006

*அனுப்பவேண்டிய முகவரி:* தலைவர், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கம், பிரதான வீதி, மானிப்பாய்.

(50699)(26.15.45)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூன்1

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வெளிமடைப் பொங்கல் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

* * *

காரைநகர், களபூமி, பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

* * *

அச்சுவேலி, ஜூன்1

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி ஆலய பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத்திருவிழாவும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (11)

* * *

சித்தன்கேணி, பெரியவளவு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பரத்திருவிழாவும் 10 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 11 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. (175)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



*அமரர்*

**கதிரன் கனகலிங்கம்**

திதி : 01.06.2006

அன்னை மடியில் 09.01.1971 — ஆண்டவன் அடியில் 06.06.1996

நேற்றைய பொழுதில்
எம்மோடு உலாவந்து
காற்றோடு கலந்தவனே!
ஆண்டுகள் பத்து சென்றாலும்
மறவோம் உனை.

சி.கந்தசாமி,
பண்டகவயல்,
கைதடி கிழக்கு.

*நினைவுகளுடன்:*
சித்தி, சித்தப்பா, தம்பி,
தங்கை, அத்தான், மருமகன்.

(50665)(23.15.45.26)

உ
ஓம் கணபதி துணை

## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு

[குருப்பட்டமளிப்பு விழா]

*நிகழும் மங்களமிகு ஸ்வஸ்தி ஸ்ரீ 'விய' வர்ஷம் வைகாசி மாதம் 18 ஆம் நாள் இன்று (01.06.2006) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 8.50 மணி வரையுள்ள பூச நட்சத்திர மிதுன லக்கின சுபவேளையில்*

*காரைநகர், பாலாவோடை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த ஸ்ரீ.ஸ்ரீமதி ப.இரகுநாதசர்மா + கமலாம்பிகைஅம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், கைதடி வடக்கு ஸ்ரீ.ஸ்ரீமதி, மா.குருசாமி ஐயர் தம்பதியரின் மருமகனும், மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விக்னேஸ்வர ஆலய பிரதம அர்ச்சகருமாகிய*

**பிரம்மஸ்ரீ இ.புஸ்பராச சர்மா**

*அவர்கட்கு*

*விசேட நிர்வாண தீட்ஷையும், ஆசார்யாபிஷேகமும் நிகழ திருவருளும் குருவருளும் பாலித்துள்ளது.*

*தீட்ஷாகுரு : முத்தமிழ் குருமணி*
*சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்*
*(ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)*
*இடம் :- அரசடிப் பிள்ளையார்கோயில்,*
*(கட்டுடை, மானிப்பாய்)*

*தங்கள் நல்வரவை நாடும்:*
ஸ்ரீ.ஸ்ரீமதி : இ.புஸ்பராச சர்மா
சிவசக்தி (தம்பதிகள்)

கட்டுடை, மானிப்பாய்.
(50683)(23.15.45.26)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 30 - 01 - 1931



விண்ணில் 25 - 05 - 2004

**திருமதி ஆறுமுகம் கனகம்மா**

(இளைப்பாறிய ஆசிரியர், யா/சாவகச்சேரி நாவலம்பிகை வித்தியாலயம், மீசாலை)

திதி: சஷ்டி

ஆண்டுகள் இரண்டு மறைந்தோடிப்
போனாலும்
உங்கள் திருவுருவம் எங்கள் மனதை
விட்டு நீங்காது
பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த உங்கள்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை
வேண்டுகிறோம்.

"ஜெயபதி",
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்.**

(50686)(32.15.45.26)

# இலங்கைத் தமிழ்அகதிகளின் முகாம்களில் போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்துக!

## தினமணி நாளிதழ் ஆசிரியர் தலையங்கம் ஆலோசனை

**இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களில் மனிதாபிமான அடிப்படையில் போதிய வசதிகளை அரசு வழங்க வேண்டும்.**

**இவ்வாறு 'தினமணி' நாளிதழ் நேற்று வரைந்த ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.**

**'புலம் பெயரும் தமிழர்கள்' என்ற தலைப்பில் வரையப்பட்டுள்ள அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

தாய் நாட்டையும் பிறந்த மண்ணையும் விட்டுவிட்டு, வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்வதைவிட வேறு பெரிய சோகம் எதுவும் கிடையாது. எண்பதுகளின் தொடக்கத்தில் இலங்கையில் ஏற்பட்ட இனமோதல், அங்கு வாழ்ந்த தமிழர்களை அம்மண்ணிலிருந்து துரத்தியது. தங்களது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தமிழகம் மட்டும் அல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்தார்கள். அந்நிய மண்ணில் அகதிச் சூழ்நிலையில் வாழ்ந்து வரும் அந்த இலங்கைத் தமிழர்கள் இனக்கலவரத்தின் நிகழ்காலச் சாட்சியங்களாக உள்ளனர்.

இலங்கையில் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவித்து, சமரசப் பேச்சுகள் தொடங்கிய பிறகுதான் அங்கு அமைதி ஏற்படுவதற்கான நம்பிக்கைக் கீற்றுத் தெரிந்தது. அதையடுத்து தமிழகத்துக்கு அகதிகளாக வந்த இலங்கைத் தமிழர்களில் பலர் தாயகம் திரும்பினர். கடந்த மூன்று ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வருவது நின்று போயிருந்தது என்றே சொல்ல வேண்டும். ஆனால், சமீபத்தில் சில மாதங்களாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையே அவ்வப்போது நடைபெற்றுவரும் மோதல் காரணமாக தமிழகத்துக்கு மீண்டும் அகதிகளாக வரும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கவலை அளிக்கும் விடயமாகும்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை 2,590 அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகவும் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வந்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், ''இலங்கை நிலைவரம் மிகவும் ஆபத்தான திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளாவிடில் மேலும் அதிக வன்முறைகளும், மோதல்களும் வெடிக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது'' என்று நோர்வே நாட்டின் சர்வதேச விவகாரங்கள் துறை அமைச்சரும் சமரசத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். மீண்டும் போர் மூளும் சூழ்நிலைக்கு இலங்கை சென்று கொண்டிருப்பது குறித்த அவரது எச்சரிக்கை இரு தரப்புக்கும் இடையே சமரசப் பேச்சுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை சீரடையும் வரை அகதிகளின் வருகை மேலும் தொடரும் என்றே தெரிகிறது.

'தமிழகம் வருகின்ற அகதிகளுக்கு அரசு வழங்கும் நிவாரண உதவிகள், அகதிகள் முகாமில் அவர்கள் கண்ணியமாக வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லை; சுய உழைப்பின் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டினால்தான் அவர்கள் தமிழகத்தில் தொடர்ந்து காலம் தள்ள முடியும்' என்ற நிலை உள்ளதைப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில், இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் மனிதாபிமான அடிப்படையில் போதிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும். அத்துடன், அரசு அளிக்கும் நிவாரண உதவிகளையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் தங்களது படிப்பைத் தொடரவும் உரிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்களைப் பூட்டி வைக்கும் கொட்டகைகளைப் போல இல்லாமல் மறுவாழ்வு இல்லங்களாக அகதி முகாம்கள் செயற்படுவதற்கு மனித நேய அணுகுமுறை தேவை.

இதற்கிடையே, நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் இம் மாதம் நோர்வே அரசு ஏற்பாடு செய்துள்ள பேச்சுகளில் பங்கேற்க விடுதலைப் புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசும் இப் பேச்சுகளில் பங்கேற்றால், இலங்கையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கான தொடர் முயற்சியாக அது அமையும். அங்கு அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டால் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் வருவது தானாகவே நின்றுவிடும் - என்றுள்ளது.

# தஞ்சம் அடைந்த தமிழ் அகதிகளை தமிழக அரசு பாதுகாக்கவேண்டும்

## திருமாவளவன் கோரிக்கை

சென்னை,ஜூன் 1



**தமிழக அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்குத் தமிழக அரசு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல் திருமாவளவன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

**அத்துடன், இலங்கையில் தலைதூக்க ஆரம்பித்துள்ள போரைத் தடுத்துநிறுத்தக் கோரும் தீர்மானத்தைத் தமிழக சட்டசபையில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.**

**பெரம்பலூரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வட கிழக்குப் பகுதிகளில் வன்முறைச் சம்பவங்களும் போர்நிறுத்த மீறல் சம்பவங்களும் அண்மைக் காலமாகத் தலைதூக்கியுள்ளன. ஈழத் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்படும் அதேவேளை, தமிழர்களுக்கெதிரான படையினரின் தாக்குதல்களும் கெடுபிடிகளும் அதிகரித்து வருகின்றன.

இதனால் அச்சமடைந்துள்ள தமிழ் மக்கள் படகுகள் மூலம்அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைகின்றனர். படையினரின் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இலங்கையிலிருந்து தப்பி தமிழகம் வரும் அகதிகள் பலர் படகு கவிழ்ந்து பலியாகியுள்ளனர்.

எனவே, ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிட்டு இலங்கையில் நிலவும் போர்ச் சூழலை தடுத்துநிறுத்தக் கோரும் தீர்மானத்தை தமிழக சட்ட சபையில் நிறைவேற்ற தற்போதைய ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். அதேசமயம் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தமிழகத்துக்குள் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு உரிய பாதுகாப்பை தமிழக அரசு வழங்க வேண்டும் - என்றார்.

## அமைச்சர் சிவராஜ் சிங்கப்பூர் பயணம்

சிங்கப்பூர்,ஜூன் 1

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் மூன்று நாள் அரசு முறைப்பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ளார்.

சிங்கப்பூர் துணைப் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் வோங்கான் செங் அழைப்பின் பேரிலேயே மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் மூன்று நாள் பயணமாக நேற்றுமுன்தினம் சிங்கப்பூர் போய்ச் சேர்ந்தார்.

இந்தப் பயணத்தின் மூலம், இரு நாட்டு உள்துறை அமைச்சகங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் அதிகரிக்கப்படும். மேலும், பாதுகாப்பு, தீவிரவாதத்தை எதிர்த்தல் மற்றும் இரு நாடுகளின் சட்ட அமுலாக்க ஏஜென்சிகளின் இடையேயான பரஸ்பர நட்புறவை அதிகரித்தல் உட்பட பல விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும் - என்று அமைச்சர் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டேல் தனது இந்தப் பயணத்தின் போது, சிங்கப்பூர் அதிபர் நாதன், பிரதமர் லீ, துணைப் பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் உட்பட பல முக்கிய தலைவர்களை சந்தித்துப் பேசவுள்ளார்.

# கடைகளில் திருடுவோரால் ஐரோப்பாவில் பாரிய நட்டம்

பேர்லின்,ஜூன் 1

கடைகளில் திருடுவோரால் ஏற்படும் நட்டம் டென்மார்க் உட்பட 25 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் பாரிய பிரச்சினையாக இருந்து வருகிற்து.

வருடாந்தம் 38 ஆயிரத்து 720 கோடி ரூபா கடைகளில் களவாடப்பட்டிருக்கிறது. மேற்கு ஐரோப்பாவில் உள்ள 17 நாடுகளிலும் தலா ஒருவருக்கு 8672 ரூபா என்ற அளவில் களவுத் தொகை காணப்படுகின்றது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள கடைகளின் மொத்த முதலீட்டில் 1.24 வீதம் களவு போயுள்ளதாக இங்கிலாந்து 'நொற்றிங்காம்' கடைக் களவு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. டென்மார்க்கில் மொத்த முதலீட்டில் 1.31 வீதம் கடைகளில் களவு போய் தற்போது 1.21 வீதம் களவுத் தொகையாக இருந்து வருகிறது. முழு ஐரோப்பிய ஒன்றியத்திலுமே அதிகம் கடைக்களவு கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் டென்மார்க் மூன்றாவது இடத்தை வகிக்கிறது. இந்தக் களவுகளில் 49 வீதம் கடைக்கு வருவோர் திருடுகின்றார்கள். 30 வீதம் கடைகளில் பணியாற்றுவோர் திருடுகிறார்கள். 7 வீதம் பொருள்களை வழங்குவோர் திருடுகிறார்கள். 14 வீதம் நட்டமேற்படுகிறது. இந்தக் கடைக்களவுகளை மிகவும் கூடுதல் கண்காணிப்புப் போட்டுக் கட்டுப்படுத்துவதற்கு 9 ஆயிரத்து 120 கோடிரூபா மேலதிகமாக செலவிட வேண்டியிருக்கிறது. அதேபோல கடைகளை நடத்துவோரின் விற்பனை வரி ஏமாற்றால் டென்மார்க்கில் 1990 இல் இருந்து 16 கோடி ரூபா வரி ஏய்ப்பு நடைபெற்றுள்ளது. ஐரோப்பாவில் விற்பனை வரி ஏய்ப்பு வருடாந்தம் 3600 மில்லியன் ரூபா என்றும் இந்த ஆய்வு கூறுகிறது.

# வருடத்துக்கு 50 லட்சம் பேர் புகையிலைப் பாவனையால் பலி!

நியூயோர்க்,ஜூன்1

புகையிலை உபயோகத்தால் உலகம் முழுவதும் வருடத்திற்கு 50 லட்சம் பேர் உயிரிழக்கிறார்கள் என்று உலக சுகாதார நிலையம் தெரிவித்துள்ளது.

இதனை நிறுத்துவதற்கு புகையிலை உபயோகத்தைத் தடுக்க கடுமையான சட்டதிட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்றும் அது கேட்டுள்ளது.

மேலும் புகையிலை உபயோகிக்கும் பழக்கம் இளம் பெண்களிடையேதான் அதிகரித்து வருவதாகவும் அது கவலை தெரிவித்துள்ளது.

புகையிலை உபயோகிக்கும் பழக்கம் முன்னேறிவரும் நாடுகளில்தான் வேகமாகப் பரவி வருகிறது என்றும், புகையிலையால் இறப்பவர்களில் பாதிப் பேர் இங்குள்ளவர்கள்தான் என்றும் அதன் அறிக்கை தெரிவிக்கிறது.

இதே நிலை நீடித்தால் 2020 ஆம் ஆண்டில் புகையிலை உபயோகத்தால் இறப்பவர்களில் 10 இல் 7பேர் முன்னேறிவரும் நாடுகளில் உள்ளவர்களாக இருப்பர் என்றும் உலக சுகாதார நிலையம் கவலை தெரிவித்துள்ளது.

# 12 தீவிரவாதிகள் மலேசியாவில் கைது!

கோலாலம்பூர்,ஜூன் 1

மலேசியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த 12 தீவிரவாதிகளைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து கோலாலம்பூரில் வெளியாகும் பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் போர்னியோ தீவில் உள்ள சபா பகுதியில் கடந்த ஆறு மாதங்களாக பொலீஸார் நடத்திவந்த தேடுதல் வேட்டையில், தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 12 பேர் சிக்கினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தோனேசியாவின் தருல் இஸ்லாம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களிடம் இருந்து ஆயுதம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. வெடிகுண்டு த்யாரிப்பது தொடர்பான தகவல்களை இவர்கள் இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துள்ளனர். இந்தக் கும்பலுடன் இருந்த இரு மலேசிய நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் எங்கே, எப்படி தாக்குதல் நடத்த திட்டமிட்டனர் என்பது உடனடியாக தெரியவில்லை. சபா எல்லையை ஒட்டி அமைந்துள்ள பிலிப்பைன்சின் தென்பகுதியில் செயற்படும் அபுசயாப் முஸ்லிம் தீவிரவாத இயக்கம் மற்றும் ஒஸாமா பின்லேடன் அல்கெய்டா உள்ளிட்ட அமைப்புக்களுடன் இவர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது குறித்து பொலீஸார் விசாரித்து வருகின்றனர்- என்று கூறப்பட்டுள்ளது.

# போதைப்பொருள், பயங்கரவாதத்தை தடுக்க இந்தியா – பாக். நடவடிக்கை

இஸ்லாமபாத், ஜூன்1

பயுங்கரவாதத்தை ஒடுக்குவது போதைப் பொருள்கள் கடத்தலை பரஸ்பரம் தடுப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தியா - பாகிஸ்தான் உள்துறை செயலர்கள் இஸ்லாமபாத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை விவாதித்தனர்.

இந்திய தூதுக்குழுவுக்கு உள்துறை செயலர் வி.கே. துகாலும் பாகிஸ்தான் குழுவுக்கு சையது கமால் ஷாவும் தலைமை வகித்தனர். இப்பேச்சுக்களில் பங்கேற்பதற்காக இந்தியத் தூதுக் குழுவினர் கடந்த திங்கட்கிழமை இரவு பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்துக்கு வந்து சேர்ந்தனர்.

பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான செயற்றிட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று வி.கே.துகால் நிருபர்களிடம் தெரிவித்தார். இரு நாடுகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இறுதிசெய்யப்படும் - என்றார் அவர்.

எல்லைப் பகுதிகளை அறியாமல் தாண்டியதால் இரு நாடுகளின் சிறையில் தேவையின்றி அடைப்பட்டுக் கிடக்கும் அவரவர் பிரஜைகளை விரைவில் விடுவிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் இப் பேச்சுக்களில் விவாதிக்கப்படும் என்று துகால் தெரிவித்தார்.

## பாடசாலைக்குச் சமுகமளிக்கவும்

யா/திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையில் தரம் 5, 9,10,11 இல் கல்வி பயிலும் மாணவிகளையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் 05.06.2006 திங்கட்கிழமை காலை 9மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

அதிபர்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

(50722)(23-45-15)

## அந்தியேட்டி அழைப்பும் 45ஆம் நாள் நினைவலைகளும்

தோற்றம் 31 - 03 - 1974



மறைவு 18 - 04 - 2006

### அமரர் கந்தசாமி கௌரிபாலன்

*கௌரிபாலா!*
*எங்கள் குல விழுதின் வேரே எங்கே? நீ எங்கே?...*
*ஈரவிழிகள் உனைத் தேடுகிறது*
*பிரிய மனையாள் ஏங்குகிறாள் - உன்*
*இள நாற்றுகள் வாடுகின்றன*
*உற்றார், உறவினர்கள் அழைக்கின்றனர்*
*எங்கே? நீ எங்கே? நேற்றைய செய்தி...*
*பொய்யாகிப் போகாதோ?*
*நாளைய பொழுது - நீ*
*நாற்பத்தைந்து நாளாகியும் - அன்பே*
*எங்கள் விழிகளில் நீர் குறையவில்லை*
*கருவறுக்க எண்ணிய காலன்*
*கதறியபோதும் உமை சிதறடித்து விட்டானே!*
*காற்றுகள் நாளை வேலியைக் கடக்கும்*
*காலம் உண்மையைக் கக்கியே தீரும்*
*கானல் நீரல்ல உம் வாழ்வு - காலமே*
*உண்மையாக்கும் உம் சாவை*

இன்று (01.06.2006) வியாழக்கிழமை சந்நிதி தீர்த்தக்கரையிலும் நாளை (02.06.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அரசடி ஒழுங்கை, புத்தூர் கிழக்கு, புத்தூர். **குடும்பத்தினர்.**

(50727)(23-45-15)

## சிதம்பரேஸ்வரம்
## மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## வசந்த மகோற்சவப் பெருவிழா

- *02.06.2006 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் மகோற்சவப் பெருவிழா ஆரம்பமாகும்.*
- *9ஆம் நாள் சனிக்கிழமை 10.06.2006 தேர்த்திருவிழா மறுநாள் 11.06.2006 ஞாயிற்றுக்கிழமை பகல் தீர்த்த உற்சவம். மாலை கொடியிறக்கம்.*
- *12.06.2006 திங்கள் பிராயச்சித்த அபிஷேகம் ஸ்ரீ வைரவர் பொங்கல்*
- *காலை, மாலை திருவிழாவுக்கு வந்து போக போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

*காலை 8 மணிக்கு தெல்லிப்பழை தடை முகாமுக்கு வரவும்.*

(50733)(39-23-45-15) **அறங்காவலர்.**

# வங்கி உதவியாளர் போட்டிப் பரீட்சை

மண்டைதீவு, ஜூன்1

மக்கள் வங்கிகளில் கடமையாற்றுவதற்கு உதவியாளர்களை பயிலுநர்களாக நியமிப்பதற்கான போட்டிப்பரீட்சை எதிர் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் இந்தப் பரீட்சை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (88)

## தென்மராட்சிப் பகுதியில் விவசாயிகள் டாப்பு தயாரிக்கும் பணிகள்

தென்மராட்சி, ஜூன்1

விவசாயிகள் டாப்பு தயாரிக்கும் பதிவு வேலைகள் தென்மராட்சிப் பகுதியில் கைதடி, மீசாலை ஆகிய கமநல நிலையங்களில் அந்தந்த விவசாய சம்மேளனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை பதிவினை மேற்கொள்ளாத தென்மராட்சி தெற்கு மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதி விவசாயிகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கைதடி கமநல நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருமாறு மறவன்புலோ விவசாய சம்மேளத்தினர் கேட்டுள்ளனர்.

பதிவினை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு மானியம், உரம்வழங்கல் போன்றவற்றில் முன்னுரிமை வழங்கப்படும் என கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (117)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை செல்வி சின்னத்துரை சாந்தினியின் அன்புச் சகோதரன்

### சின்னத்துரை மகேந்திரன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.

(50721)(23-45-15)

## மரண அறிவித்தல்

### கனகசபை பரமேஸ்வரன் (சோதி)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பரமேஸ்வரன் அவர்கள் 30-05-2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் கனகசபை-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சபாரத்தினம்-ஸ்ரீரங்கநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் கௌசலா தேவியின் அன்புக் கணவரும் கௌசிகன், நிரோஜா, பரதன், சாரங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ்வரன், ஸ்ரீகௌரி, மகேஸ்வரன்,ஜெயகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வகுமார், சறோஜினி, உஷா, சசிகரன், திலகவதி, சௌந்தர்ராஜன், ஸ்ரீரங்கநாதன், பவானந்தன்,சதானந்தன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வை.மயில்வாகனம், (மாமா).

பழைய தபாலகம்,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில் மேற்கு.

(50720)(26-23-45-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 - 09 - 1944



உதிர்வு 02 - 05 - 2006

### அமரர் கந்தன் சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த*
*எங்கள் அன்புத் தெய்வமே!*
*ஒரு மாதம் கடந்தாலும்*
*உங்கள் நினைவுகள் அழியாது.*

இன்று (01.06.2006) வியாழக்கிழமை நா.ஏரம்பு ஜே.பி சோதிடர் அவர்களது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*என்றும் நீங்கா நினைவில்:*
*நெசவாளர் வீதி,*
*சரசாலை தெற்கு, சாவகச்சேரி.* **மனைவி, பிள்ளைகள்.**

(50731)(32-23-45-15)

# JAFFNA COLLEGE
## Vaddukoddai
### விசேட வகுப்புகள் பற்றிய கலந்துரையாடல்

05.06.2006 திங்கட்கிழமை விசேட வகுப்புகள் பற்றிய கலந்துரையாடலுக்காக தரம் 4,5,9,10,11 மற்றும் உயர்தரம் 2007 மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது ஒட்லி மண்டபத்தில் ஒன்று கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**- அதிபர்**

(சி.49487)(23-45-15)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

எமது நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்காக 30.05.2006 இல் நடத்தவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 20.10.2006 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

கா.சிவஞானம் (தலைவர்)
யாழ்.மாவட்ட ப.நோ.கூ.ச. நிறுவனங்களின் பணியாளர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

(சி.49408)(32-23-45-15)

உ
தில்லையம்பதியாள் துணை.

சீர்மேவு யாழ்ப்பாணம், கோண்டாவில் தில்லையம்பதி

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

வியவருஷம் 31வது ஆண்டு

## வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2006



| | |
|---|---|
| 02.06.2006 | வெள்ளி மு.ப. 10.00 மணிக்கு கொடியேற்றம். |
| 06.06.2006 | செவ்வாய் மாலை 7.00 மணிக்கு பூச்சப்பறம். |
| 07.06.2006 | புதன் மாலை 7.00 மணிக்கு வசந்தோற்சவம். |
| 09.06.2006 | வெள்ளி மு.ப. 3.00 மணிக்கு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய முன்றலில் வேட்டையாடல். மாலை 7.00 மணிக்கு சப்பறம். |
| 10.06.2006 | சனி மு.ப. 10.30 மணிக்கு ரத உற்சவம், மதியம் அன்னதானம். |
| 11.06.2006 | ஞாயிறு மு.ப. 10.00 மணிக்கு பூர்ணை தீர்த்த உற்சவம், மதியம் அன்னதானம். பி.ப. 4.00 மணிக்கு ஸ்ரீ சக்கர பூசை, 4.30 மணிக்கு திருவூஞ்சல். மாலை 6.00 மணிக்கு கொடியிறக்கம் தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவம். |
| 12.06.2006 | திங்கள் மதியம் அன்னதானம். மாலை 7.00 மணிக்கு பூங்காவனம். |
| 13.06.2006 | செவ்வாய் காலை பிராயச்சித்த அபிஷேகம். மாலை 7.00 மணிக்கு வைரவர் மடை. |

பிரதமகுரு: *சிவாச்சார்யமணி, சிவாகமகிரியா தத்துவநிதி*
சிவப்பிரம்மஸ்ரீ இரங்க வரதராஜக்குருக்கள் - *கோண்டாவில்*

மங்கள இசை:
செல்வன் நா. பிரசாத் குழுவினர் - *சாவகச்சேரி*

**உற்சவ காலத்தில் தினமும் இரவு 8.00 மணிக்கு தொடக்கம் 9.00 மணி வரை தெய்வீகப் பேருரை நடைபெறும்.**

தில்லையம்பதி — **தில்லையம்பதியாளே ! சிவகாம சுந்தரியே ! சரணம்.** — பரிபாலன சபை.

## பெயர் மாற்றம்

*56, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் சுந்தரம் அருமைநாதன் ஆகிய நான் 31-05-2006 முதல் எனது பெயரை சுந்தரம் ஜசிந்தன் என சட்ட வரம்புக்கமைய மாற்றியுள்ளேன். இனி வரும் காலங்களில் இப்பெயரையே பாவிப்பேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.*

56, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

(50728)(26-23-45-15) சுந்தரம் ஜசிந்தன்.

# சிங்கள மக்களின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,ஜூன்1

வாழைச்சேனை, ஓமடியாமடு கிராமத்தில் 13 சிங்கள மக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை ஈ.பி.டி.பி. கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாழைச்சேனை ஓமடியாமடு எல்லைக் கிராமத்தில் கால்வாய் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அனுராதபுரத்தைச் சேர்ந்த அப்பாவிச் சிங்கள மக்கள் பதின்மூன்று பேரைப் புலிகள் கோரமாகச் சுட்டுக் கொலை செய்த சம்பவத்தை ஈ.பி.டி.பி வன்மையாகக் கண்டிக்கிறது.

சம்பவத்தில் பதினைந்து பேரை வரிசையாக நிறுத்திவிட்டு சமாதானம் முடிவுக்கு வருவதாகக் கூறிவிட்டே புலிகள் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகவும் - அதில் பதின்மூன்று பேர் ஸ்தலத்திலேயே பலியானதுடன், இருவர் படுகாயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிகிறோம்.

காயமடைந்திருப்பவர்களின் வாக்குமூலத்தின்படி புலிகளே இக்கொடூரமான படுகொலையைச் செய்துள்ளனர் என்பதை உறுதி செய்யமுடிகிறது. புலிகளின் இவ்வாறான அப்பாவி மக்கள் மீதான படுகொலைகளை ஈ.பி.டி.பி. கண்டிப்பதோடு இவ்வாறான படுகொலைகள் எவ்வகையிலும் சமாதானத்திற்கு உதவாது என்றும் கூறிவைக்க விரும்புகிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளை பயங்கரவாதிகளாகத் தடைசெய்த அறிவிப்பு வெளியாகிய ஒருசில மணித்தியாலங்களுக்குள்ளாகவே புலிகளின் பயங்கரவாதம் இப்படுகொலைகளினூடாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தம் ஒன்றை நோக்கி நாட்டு நிலைமை நகர்ந்துகொண்டிருக்கையில், அப்பாவி மக்கள் பெரிதும் குழப்பமடைந்தவர்களாகவும், பதற்றமடைந்தவர்களாகவும் வாழ்ந்துகொண்டிருக்கையில் தமது கொலைவெறியை புலிகள் அப்பாவி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் புரிந்துவருவது கடுமையான கண்டனத்திற்குரியதாகும். இவ்வாறான படுகொலைகளை இனரீதியான குழப்பங்களை உண்டுபண்ணும் ஒரு சதி முயற்சியாகவே ஈ.பி.டி.பி. கருதுகிறது.

ஆகவே, இனங்களிற்கிடையே மோதல்களை உருவாக்கும் விதமான இவ்வாறான படுகொலைகளை புலிகள் நிறுத்தவேண்டும் எனவும் ஈ.பி.டி.பி. வலியுறுத்திக் கூறவிரும்புகிறது - என்று அதில் உள்ளது.

# படையினரால் வழிமறிக்கப்பட்ட குடும்பஸ்தர் பின்னர் வீடு திரும்பவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்1

சீருடையினரால் வழிமறிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் அதன் பின்னர் காணாமற்போய்விட்டார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இணுவில் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த நகைக்கடை உரிமையாளரான சுப்பிரமணியம் சிவநேசன் (வயது 36) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

சம்பவதினம் மேற்படி நபர் மோட்டார் சைக்கிளில் யாழ். நகரப் பகுதிக்கு வேலை நிமித்தம் சென்றுவிட்டு வீடு திரும்பும்போதே காணாமற்போயுள்ளார்.

(190)

# விதைநெல் தேவைப்படுவோரை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

தென்மராட்சி,ஜூன்1

காலபோக நெற்செய்கைக்கு விதைநெல் தேவைப்படுவோரை தத்தமது பகுதி கமநல நிலையத்தில் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா விதைநெல் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அதி முளைதிறன் கொண்ட இனங்களான ஏரி 402, ஏரி 353,பிடபிள்யு 361 ஆகிய விதை நெல் இனங்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கைதடி, மீசாலை ஆகிய கமநல நிலையங்களில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(117)

## யாழ். இந்துவின் தரம் 11 மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ். இந்துக் கல்லூரியில் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவர்களையும் அந்த வகுப்பில் போதிக்கும் ஆசிரியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று கல்லூரி அதிபர் வீ.கணேசராசா கேட்டுள்ளார்.

மாணவர்கள் பாடசாலைச் சீருடையில் சமுகமளிக்க வேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார்.

## திருநெல்வேலி சந்தை குத்தகை ரத்து

யாழ்ப்பாணம்,ஜூன்1

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தையின் குத்தகை இரத்துச் செய்யப்பட்டு இன்று வியாழக்கிழமை தொடக்கம் பிரதேச சபை உத்தியோகத்தர்களால் நடத்தப்படும் என்று பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(202)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 17 - 05 - 1937

மறைவு 02 - 05 - 2006



### அமரர் கந்தையா மனோன்மணி

கடந்த 02-05-2006 செவ்வாய்க்கிழமை காலமான எமது குடும்பத்தலைவி கந்தையா மனோன்மணியின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசிமூலமும் தந்தி மூலமும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் உதவிகள் பல புரிந்த நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (01-06-2006) வியாழக்கிழமை அன்னாரின் வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யானைக்குட்டி ஒழுங்கை, தெல்லிப்பழை. தொ.பே.0779590979 -குடும்பத்தினர். (50732)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள் 783 நீலம்

கன்னி 30-05-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4294309 - 4308261

வெற்றி இலக்கங்கள் 04 07 22 27

ஜக்பொட் பரிசு ரூபா 16,72,600/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 66,46,020/-

தொடர் இல. 5191550 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 2,92,547 | 10/- | 29,25,470/- |
| 2 இலக்கங்கள் | 26,836 | 20/- | 5,36,720/- |
| 1 இல+லக்கினம் | 26,566 | 30/- | 7,96,980/- |
| 2 இல+லக்கினம் | 2,441 | 100/- | 2,44,100/- |
| 3 இலக்கங்கள் | 721 | 500/- | 3,60,500/- |
| 3 இல+லக்கினம் | 66 | 5,000/- | 3,30,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 16,72,600/- | - |
| மொத்தம் | 5 | | 55,93,770/- |
| முச்சக்கர வண்டிகள் | | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,49,186 | | 66,46,020/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 23,25,400/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 4296180-5-09 |
| அனுராதபுரம் | 4301390-3-93 |
| பதுளை | 4296873-1-28 |
| கண்டி | 4304408-0-61 |
| அம்பாறை | 4290293-6-59 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை இல. 33, சென்ற் மைக்கேல் வீதி கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03

## ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த

பட்டியல்

புதிய வெளியீடு

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் றிட்சஸ்சனின்

கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

காட்சி நேரம் : 10.30, 2.30

## BARATHY

சித்தன்கேணி

O/L DAY CLASS

திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி

காலை 8-12 மணிவரை

பிரிவு 2

ஆரம்பம்:- 02.06.2006 வெள்ளி 8 மணி

எமது தனித்துவமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் திரு.தேவா | கணிதம் திரு.எஸ்.சிவரூபன் |
| தமிழ் திரு. குகபரன் திரு. தமிழ்மாறன் | ஆங்கிலம் திரு.இராஜகுலசூரியர் திரு.விஜய பாஸ்கர் |
| சமூகக்கல்வி திரு. சுதன் திரு. சந்திரன் | சமயம் திரு. தரன் |
| சுகாதாரம் திரு. குமணன் | வர்த்தகம் திரு. லோகேஸ்வரன் |
| கிறிஸ்தவம் திரு. வசந்தன் | விவசாயம் பிரபல ஆசிரியர் |

பிரிவு 2 இற்கான அனுமதியினை நாளையில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களால் இப்பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிக்கப்படும்.

## 'துளிர்கள்'

அரசசார்பற்ற நிறுவனத்தில் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு!

பயிற்சிக்காலம் : 3 மாதங்கள்

தகைமை : G.C.E.A/L

ஆங்கிலத்தில் தேர்ச்சியும், சமூக சேவையில் ஈடுபாடும் விரும்பத்தக்கது.

10.06.2006 இற்கு முன்பு விண்ணப்பங்களை இருபாலாரும் அனுப்பி வைக்கலாம்.

(50707)(23)

இயக்குநர் "துளிர்கள்" - இல 15/12, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.


## மரண அறிவித்தல்கள்

### பேராசிரியர் சூரியகுமாரன்



ஐக்கிய நாடுகள் சபையின் ஆசியக் கிளையின் பதில் நிர்வாக அதிகாரி, பேராசிரியர் சூரியகுமாரன் தனது 84 ஆவது வயதில் ஞாயிற்றுக்கிழமை 28-05-2006 மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வள்ளியின் அன்புக் கணவரும், ரவிசங்கரன், மங்களா, தர்சினி, பக்தலத்சலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி, இந்திரன், இம்பளி ஆகியோரின் அன்பு மாமனாரும் சதீஸ், அரவிந், சிலானி ஆகியோரின் அருமைப் பாட்டனாரும், காலஞ்சென்ற அதிகார் நாகநாதனின் (கோப்பாய்) அருமைப் பேரனும், முதலியார் கனகநாயகம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், வழக்கறிஞர் சங்கரப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் வழக்கறிஞர் சண்முகநாயகம், சேதுப்பிள்ளை பாலசிங்கம் (அமெரிக்கா), வங்கியாளர் சங்கரகுமாரன், காலஞ்சென்ற தங்கம் சேனாதிராசாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 03-06-2006 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, குடும்பத்தினர்.
தொ.பே.2574912

(சி/49490)

### இராசையா சிவசோதிநாதன்

(லங்கா சீமெந் லிமிட்டட்)



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சிவசோதிநாதன் நேற்று (31.05.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சிவபாக்கியத்தின் மூத்த மகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் நிரோசன், நிவேந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி, ரமேஸ், இராசமணி, இராதா, சுதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானசுந்தரம், தசிதரன் மாதேவா (கனடா), துரைராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), செல்வரட்ணம் (தெய்வேந்திரம் - வர்த்தகர்), பாலச்சந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற இரர்சேந்திரம், இந்திரராசா (நல்லூர் M.P.C.S), மல்லிகா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.06.2006) வியாழக்கிழமை 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி தெற்கு,
கொக்குவில்.

தகவல்:
இந்திரராசா (மைத்துனர்)

## 'யுனிசெவ்' அலுவலகம்முன் லண்டனில் ஆர்ப்பாட்டம்

லண்டன்,ஜூன்1

லண்டனிலுள்ள 'யுனிசெவ்' காரியாலயத்துக்கு முன்பாக தமிழ் இளைஞர்கள் அமைப்பு ஒன்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருக்கிறது.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் சிறுவர் மீதான வன்முறைகளுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது 'யுனிசெவ்' அமைப்பு மௌனம் சாதித்து வருவதற்கு ஆட்சேபனை தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

லண்டன் ஹோர்மன் நகரில் உள்ள 'யுனிசெவ்' அலுவலகம் முன்பாக இவ்வார்ப்பாட்டம் இடம்பெற்றது.

# புலிகளின் தலைவர் பிரபாகரனை ஏன் இன்னும் கைதுசெய்யவில்லை?

## பொலீஸ்மா அதிபரிடம் மேன்முறையீட்டு நீதிமன்றம் கேள்வி

கொழும்பு,ஜூன்1

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை ஏன் இன்னும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தவில்லை என்று பொலீஸ்மா அதிபரிடம் மேன்முறையீட்டு நீதிமன்றம் விளக்கம் கோரியுள்ளது.

முன்னாள் பொலீஸ்மா அதிபரும், ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் உறுப்பினருமான எச்.எம்.ஏ.பி.கொட்டகதெனிய புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்திருந்த மனுமீதான விசாரணையின்போதே இவ்வாறு பொலீஸ்மா அதிபரிடம் விளக்கம் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 21ஆம் திகதி மன்றில் ஆஜராகி இது தொடர்பான விளக்கத்தை பொலீஸ்மா அதிபர் குற்றப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மத்திய வங்கி குண்டுவெடிப்புத் தொடர்பாக 2002ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு கொழும்பு நீதிமன்றம் 200 ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

இத்தண்டனையை அனுபவிக்க பிரபாகரனை பொலீஸார் கைதுசெய்யவேண்டும் என்றும் கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (த-ரி)

## அக்கரைப்பற்றில் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு,ஜூன்01

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 30 முதல்.35 வயது மதிக்கத்தக்க இப்பெண்ணின் சடலம் அக்கரைப்பற்று ஒலுவில் கடற்கரைப்பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது அடையாளம் காண்பதற்காக அக்கரைப்பற்று மருத்தவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

# நேற்றும் 48 அகதிகள் வந்தனர்; மண்டபம் முகாமில் நெருக்கடி!

இராமேஸ்வரம், ஜூன் 01

இலங்கையிலிருந்து மேலும் 48 அகதிகள் நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்துள்ளனர்.

இலங்கையின் திருகோணமலை, மன்னார் பகுதியில் இருந்து 16 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆண்கள், 11 பெண்கள், 13 குழந்தைகள் உட்பட 48 பேர் மூன்று படகுகளில் தனுஷ்கோடி, அரிச்சல்முனை, முகுந்தராயர் சத்திரம் ஆகிய கடற்கரைகளில் வந்திறங்கினர்.

இராமேஸ்வரம் பொலீஸாரின் விசாரணைகளின் பின்னர் இவர்கள் மண்டபம் அகதி முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இதேவேளை, அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் மண்டபம் முகாமில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால், அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள புதிய அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சை மீள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கை இணக்கப்பாட்டுக்கமைய அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்கவேண்டுமெனவும் அந்த அறிக்கையில் ஐ.தே.க. வலியுறுத்தியிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் நிலைமை சீரற்றிருப்பது குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் விடுத்திருக்கும் கூட்டறிக்கையை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்கிறது.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் அனைத்து இலங்கையர்களும் (அரசு - புலிகள் உட்பட) இணைந்து செயற்பட்டாலே அமைதி முயற்சியில் இறுதி இலக்கை அடைய முடியுமென்று இணைத்தலைமைகள் ஏற்றுக்கொண்டிருப்பதையும் ஐ.தே.கட்சி முழுமையாக அங்கீகரிக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகிய தரப்புகளைக் கொண்ட இணைத்தலைமைகள் யுத்த அபாயத்தைச் சுட்டிக்காட்டி அதிலிருந்து தப்புவதற்கு பல்வேறு யோசனைகளையும் முன்வைத்திருக்கின்றன.

சீரற்ற நிலையிலிருந்து மீட்டு நாட்டை மீண்டும் அமைதிப் பேச்சை நோக்கி இட்டுச் செல்ல உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இணைத் தலைமை நாடுகள் அரசையும், புலிகளையும் கோரியிருக்கின்றன.

இதன்படி -

''புலிகள் தீவிரவாதம் மற்றும் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சு நடவடிக்கைகளில் மீண்டும் இணைய வேண்டும்'' -

''தமிழ் மக்களின் நியாயமான துன்பங்களை களைந்து அரசானது தன்து கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்தி அனைத்து தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். சட்டத்தை மீறுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அனைத்து மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் புதிய ஆட்சிமுறைக்கான அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்''

அரசு மற்றும் விடுதலைப் புலிகள், அமைதியை நிலைநாட்டுவதற்காக எடுத்திருக்கும் நடவடிக்கைகள் மற்றும் நாடு யுத்தமொன்றை நோக்கிச் செல்லும் நிலைமை என்பன பற்றி அனைத்து அரசியற் கட்சிகளும், இலங்கையர்களும் அவதானித்துவருகின்றனர்

அரசும், புலிகளும் அமைதிப் பேச்சுகள் வெற்றிபெற்ற 2003, 2004ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இணங்கிய அடிப்படைக் கொள்கைகளில் மீண்டும் உறுதிபூண வேண்டுமென்ற இணைத்தலைமைகளின் சிபாரிசை ஐ.தே.க.முழுமையாக அங்கீகரிக்கிறது.

அமைதிப் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டுமாயின் 2003 ஆம் ஆண்டின் பெப்ரவரியில் செய்யப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம், 2002 மற்றும் 2003ஆம் ஆண்டுகாலப் பகுதிக்குள் ஆறு சுற்றுப் பேச்சுகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் 2006ஆம் ஆண்டின் ஜெனீவா மாநாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்ளவேண்டுமென இணைத் தலைமை நாடுகள் சுட்டிக்காட்டியிருப்பதை அனைவரும் கவனத்திற்கு எடுக்க கொள்ள வேண்டும்.

- இப்படி ஐ.தே.கவின் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலித ஹோகன்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

''அந்தப் பேச்சுக் குழுவுக்கு தலைமை தாங்கிச் செல்லும் பொறுப்பை ஜனாதிபதி என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். எனினும் அதில் இடம் பெறும் ஏனைய உறுப்பினர்கள் குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. அதனையும் ஜனாதிபதியே முடிவு செய்வார்'' என்றார் கோஹன்ன.

இதேவேளை - இந்த விடயம் தொடர்பாக அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தபோது சமாதானம் தொடர்பில் தற்போது நிலவும் நிலைமையை மதிப்பீடு செய்யவும் -

யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினரின் பாதுகாப்புப் பற்றிப் பேசவும் - இரு தரப்பினரும் - அசும், புலிகளும் - சந்திப்பதற்கான தேவையை எடுத்துக் கூறியிருந்தார்.

இதற்கான அரச குழு ஜெனீவா செல்லவுள்ளது. அதற்கு சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் பாலித ஹோகன்ன தலைமை வகிப்பார்.

இந்தப் பேச்சில் விடுதலைப் புலிகளையும் பங்குகொள்ளுமாறு நோர்வே விடுத்த அழைப்புக்கு அவர்கள் சாதகமாகப் பதிலளிப்பர் என அரசு எதிர்பார்க்கிறது.

நடைபெறவுள்ள இந்தப் பேச்சில், தற்போதைய நிலையில் கண்காணிப்புக் குழுவின் செழுமையான செயற்பாடு குறித்தும்-

கண்காணிப்புக் குழுவுடன் தொடர்பான தொழிற்பாடு, செயற்பாட்டு வழிமுறை பற்றியும் கலந்துரையாடலாம் என எதிர்பார்க்கின்றோம். - என்று தெரிவிக்கப்பட்டது.

## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில், பாலித ஹோகன்ன தலைமையிலான குழுவை புலிகள் உயர்மட்டக் குழுவாகக் கருதவில்லை என்றும் -

அரசுத் தரப்பில் அமைச்சர்கள் உள்ளிட்ட உயர்மட்டக் குழு இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றும் பட்சத்திலேயே புலிகளின் உயர்மட்டக் குழுவும் இதில் பங்குபற்றும் சாத்தியம் உள்ளதாகவும் அறியவந்தது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பு இந்தச் கோரிக்கையை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்லியடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- பருத்தித்துறை இடையில் 750 பாதையூடாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தும் நேற்றுமாலைவரையும் 751 மற்றும் 757 பாதையூடாகத் திருப்பிவிடப்பட்டன.(70-173-15)

## தடை விதித்தாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான காத்திரமான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்கவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அழைப்புவிடுத்துள்ளது.

அத்துடன், அனைத்துக் குடிமக்களுக்குமான சட்டம் - ஒழுங்கை உறுதிசெய்து, இதுவரை விசாரணைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படாத சகல வன்முறைச் சம்பவங்களையும் விசாரணைக்கும், குற்றப்பதிவிற்கும் உட்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெறும் நீதிக்குப் புறம்பான - படுகொலைகள் குறித்துக் கவலை வெளியிட்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் கருணா குழுவின் நடவடிக்கைகளை மிகவும் பாரதூரமானவையாகக் கருதுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இயல்புநிலையைச் சீர்குலைப்பதற்கும், சமாதான முன்னெடுப்புகளை அபாயகரமான நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் கருணா குழுவின் நடவடிக்கைகள் வழிகோரியிருக்கின்றன என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் கருணா குழுவின் நடவடிக்கைகளை தீவிர கண்காணிப்பிற்கு உட்படுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது.

அத்துடன், இருபது வருட மோதலுக்கு முடிவுகட்டி நாட்டில் நிரந்தர சமாதானத்தை எற்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் உண்மையான பற்றுறுதியுடன் செயலாற்றவேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (க)

## கண்காணிப்புக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் பரா ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்துப் புலிகளின் நீதித்துறை விடயங்கள் குறித்து அவர் ஏற்கனவே கலந்துரையாடியிருந்தார்.

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று சந்தித்துப் பேசினார்.

முல்லைத்தீவில் கடற்புலிக ளின் செயலகம் ஒன்றில் நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இலங்கை கடற்படையினர் தமிழ் மக்கள் மீது தொடர் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேவேளை, சிங்கள மீனவர்களை அழைத்து வந்து தமிழீழக் கடற்பரப்பில் பாதுகாப்பு வழங்கி மீன் பிடிக்க விடுவது உள்ளிட்ட பல்வேறு கடல் சார் விடயங்கள் மற்றும் சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து கேணல் சூசை, உல்ப் ஹென்றிக்ஸனுக்கு விளக்கமளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கேணல் சூசையுடன் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், கடற்புலிகளின் தளபதி ஸ்ரீராம் ஆகியோரும் பங்கேற்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளையும் உல்ப் ஹென்றிக்ஸன் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ. மரியராசா, மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்டு வரும் அத்துமீறல் நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கினார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற வேளை காணாமல் போன மீனவர்கள் இருவரின் நிலை குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

O/L DAY CLASS
விஞ்ஞானம்: இரா.செல்வவடிவேல்
கணிதம் : C.K.B.தயாளன்
சமூகக்கல்வி : S.பிரபா
ஆங்கிலம் Y.துஷ்யந்தன்
சமயம் K.ஐங்கரன்
தமிழ் பிரபல ஆசிரியர்
வர்த்தகம் M.வித்தி
காலை 7 மணி தொடக்கம் 1 மணிவரை அனுமதிகள் அலுவலகத்தில்
நுணாவேசல் (யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

எலைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்.
O/L MATHS
கணிதம் சித்தியடையாத, கணிதத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான விசேட பிரத்தியேக வகுப்பு.
ஆசிரியர்: திரு.T.அற்புதராஜா
ஆரம்பம்: 02.06.2006 வெள்ளி காலை 6.30 மணி
* 30 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்
"ORGANIC CHEMISTRY"
ஆரம்பம்: 01.06.2006 Thurs 10 a.m.
A/L 2008
புதிய பிரிவு
ஆரம்பம்: 03.06.2006 Sat. 11.30 a.m.
By: அன்பழகன் B.Sc.

A/L 2006
பௌதீகவியல் - பரீட்சை வழிகாட்டி - பல்தேர்வு வினாக்கள்
அமைப்புக் கட்டுரை வினாக்கள்
கட்டுரை வினாக்கள்
விளக்கமான விடைகளுடன்
அ.கருணாகரர்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

BEACON
யாழ்.நகர்
புவியியல் வினாவிடை
ஆரம்பம்:- 03-06-2006 Sat. 10a.m.
By: கிரிதரன்

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*